Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2017

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




## கடினமான வசனங்கள்


மரணம், நரகம், பரலோகம் மற்றும் பூமி • கடவுள் மற்றும் பரிபூரணம்

ஒப்புரவாக்குதல் • கிறிஸ்தவ நடை • கிறிஸ்துவின் இரண்டாம் வருகை • உயிர்த்தெழுதல்

இராஜ்யம் • பாஸ்டர் சி டி ரசலின் ( Pastor C.T.Russel ) பதில்கள்

**கடினமான வசனங்கள்**

# ஆதியிலே



பெரும்பாலான வேதப் பகுதி, புரிந்துகொள்ள எளிமையாக இருந்தாலும், சில வசனங்கள் கடினமாக உள்ளது. சில வசனங்கள் வாசகர்களுக்கு கடினமாக இருக்கலாம், சில வசனங்கள் மற்றவர்களுக்கு விளக்குவதற்கு கடினமாக இருக்கலாம். மரணம், கடவுள், ஒப்புரவாக்குதல், கிறிஸ்தவ ஜீவியம் மற்றும் இப்பொழுதிலிருந்து தேவனுடைய நித்தியமான இராஜ்யம் வரையில் நடக்கக்கூடிய காரியங்களை கருத்தில் கொள்ளும் மூன்று பிரிவுகளை பற்றிய கேள்விகளை பல்வேறு பிரிவுகள் ஆலோசிக்கிறது. ஒவ்வொரு பிரிவில் உள்ள சில உதாரணங்கள் :

(1)புத்தியில்லாத நிறுத்து குறியீடுகள் பயன்படுத்தப்பட்டதினால், இயேசு அந்த கள்வனை அவரோடுக்கூட, நரகத்தில் (பாதாளம்) உள்ள ஒரு பரதீஸ்க்கு அழைத்து செல்லுவதற்கு வாக்களித்தது போல தோன்றுகிறது. (லூக்கா 23:43)

(2)தேவன் பாவம் செய்ய முடியாத போதிலும் (ஏசாயா 45:8) பொதுவான வார்த்தைகளை தவறாக உணர்ந்து கொள்வதினால், அவர் பாவத்தை உருவாக்குவதை போல் தோற்றம் அளிக்கிறது. அல்லது அவர் பாவத்திற்காக மனம் வருந்துவதை போல் காட்டுகிறது. (ஆதியாகமம் 6:7)

(3)யோவான் 19:20 ம் வசனத்தின் சூழ்நிலையை மேலோட்டமாக காணும்போது, சிலுவையின் மேல் விலாசத்தின் மூன்று அல்லது நான்கு முரண்பாடான பதிப்புகளை சுவிசேஷங்கள் கொடுப்பது போல தோற்றம் அளிக்கிறது.

(4)தேவனுடைய திட்டத்தில் காலத்தின் அம்சங்களை தவிர்ப்பது, தேறுதல்களையும் இலவசமான கிருபையையும் முரண்பாடாக தோற்றம் அளிக்கும்.

(5)கண்ணுக்கு புலப்படாதவைகளை எவ்வாறு தெளிவாக காணமுடியும் என்று வெளி 1:7 ம் வசனத்தில் கலந்தாராயப்படுகிறது.

(6)உயிர்த்தெழுதல் இல்லாததை போல காணப்படும், முதலாம் உயிர்த்தெழுதலை பற்றிய ஒரு பிரச்சனையை பழங்காலத்து கைப்பிரதிகளில் தீர்க்க முடியும். (வெளி 20:5)

(7)கிறிஸ்தவ ஞானஸ்நானம், மரித்தோருக்கு எவ்வாறு பலனளிக்கும் என்று சிறந்த வேதாகம படிப்பு விளக்கம் அளிக்கும். (1கொரிந்தியர் 15 :29)

(8)கிறிஸ்தவ கொள்கைகள் இன்றி ஒன்றுக்கு மேற்பட்ட சாத்தியமான விளக்கங்களை வேதமாணவர்கள் கருத்தில் கொள்ளலாம்.

(9)கேள்விகளில் கொடுக்கப்படும் வசனங்களுக்கு வேத வசனத்தின் அட்டவணை பின் தொடரும். ஆசிரியர்களும் இங்கு அடையாளம் காட்டப்படுகிறார்கள்.

கூடுதலான வாய்ப்புகளை கருத்தில் கொள்வதற்கும் அல்லது துணை செய்திகளை சுதந்திரமாக சேர்ப்பதற்கும் பதிப்பாசிரியரின் குறிப்புகள் அங்கு குறிப்பிடப்படுகிறது.

**செப்டம்பர் - அக்டோபர் 2017**


**மரணம், நரகம், பரலோகம் மற்றும் பூமி** 2
ஜீவனத்தின் அஸ்திபாரம் மற்றும் இப்பிரபஞ்சம்

**கடவுள் மற்றும் பரிபூரணம்** 5
கடவுளுடைய பரிபூரணம் அவருடைய கிரியைகளுக்கு முரண்பாடாக இருக்கக்கூடுமா?

**ஒப்புரவாக்குதல்** 11
நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுவை பற்றியது

**கிறிஸ்தவ நடை** 15
நாம் என்ன செய்ய வேண்டும், நாம் என்ன செய்யக்கூடாது

**கிறிஸ்துவின் இரண்டாம் வருகை** 21
நம்முடைய எதிர்பார்ப்புகள் என்னவாக இருக்க வேண்டும்?

**உயிர்த்தெழுதல்** 26
உயிர்த்தெழுதல் – எப்படி, எப்போது நடைபெறும்?


**இராஜ்யம்** 29
கிறிஸ்து மற்றும் தேவனுடைய இராஜ்யத்தில் நாம் எதை எதிர்பார்க்க வேண்டும்.

**பாஸ்டர் சி டி ரசலின் (Pastor C.T.Russel) பதில்கள்** 34
மத கோட்பாடுகள் இல்லாத சில ஆச்சரியமூட்டும் செய்திகள்

**இன்றைய தீர்க்கதரிசனத்தில்** 36
சமுதாயத்தை மாற்றியமைத்தல்

(1) கீழ்காண்பவைகளைப் பற்றிய கடினமான வசனங்கள்

# மரணம், நரகம், பரலோகம் மற்றும் பூமி



**லூக்கா 23:43** இன்று பரதீஸிலா? இயேசு அந்த கள்வனுக்கு நரகம் (பாதாளம்) செல்வதற்கு வாக்களித்தாரா? அவர்கள் சிலுவையில் அறையப்பட்ட அன்றைய தினமே, இயேசு அந்த மனுஷனுக்கு பரதீஸில் உடனடியாக ஜீவனை வாக்களித்ததை போல King James பதிப்பில் உள்ள வேதபகுதி கூறுகிறது. ஆயினும், இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின் அவர் "நரகத்தில் " (பாதாளத்தில் ) இருந்தார் என்று அப்போஸ்தலர் 2:22-23 வசனங்கள் கூறுகிறது. மேலும் மூன்றாம் நாள் வரைக்கும் பிதாவாகிய தேவன், இயேசுவை எழுப்பவில்லை என்று அப்போஸ்தலர் 10:40 ம் வசனம் உறுதியளிக்கிறது. அந்த கள்வனுக்கு இயேசு நரகத்தில் (பாதாளம்) ஒரு உயிர்த்தெழுதலை உண்மையில் வாக்களித்தாரா ? இல்லை, லூக்கா 23:43ம் வசனத்தில் வேத பாரகர்கள் அல்லது மொழிபெயர்ப்பாளர்கள் மிக மோசமாக குறியீடுகளை பயன்படுத்தினதால் இந்த பிரச்சனை உருவானது. காற்புள்ளி (coma) "இன்று" என்ற வார்த்தைக்கு முன் வராமல், பின் வரவேண்டும். மூல கிரேக்க பிரதிகளில் குறியீடுகள் குறிப்பிடப்படாத காரணத்தினால், வேத பாரகர்கள் தங்களுடைய சிறந்த புரிந்துகொள்ளுதலுக்கு ஏற்றவாறு குறியீடுகளை பயன்படுத்தினார்கள். இந்த விஷயத்தில் இது தவறாக போய்விட்டது. "இந்த குறியீடு "இன்றைக்கு என்ற வார்த்தைகள் முன் அல்லது பின் வரலாம்" என்று லம்ஸா குறிப்பிடுகிறார். "மெய்யாகவே, இன்று நான் உனக்கு சொல்லுகிறேன் - நீ என்னோடு கூட பரதீஸில் இருப்பாய்". இவைகள் உண்மையில் ஆறுதலான வார்த்தைகள். என்று ரோதர்ஹாம் குறிப்பிடுகிறார்.

பாடம் : தேவன் நம்முடைய வாழ்க்கையில் கொண்டுவரும் அனுபவங்களுக்கு விளக்கம் அளிக்கையில்,நாம் இதை எப்போதாவது செய்கிறோமா ? சில நேரங்களில் நாம் தவறான இடங்களில் குறியீடுகளை பயன்படுத்துகிறோம் அல்லது தேவன் காற்புள்ளி (coma) வைக்கும் இடங்களில் நாம் முற்றுப் புள்ளி வைக்கிறோம். தேவனுடைய வெளிப்படுத்துதலுக்கு காத்திராமல், நாமே சொந்தமான குறியீடுகளை வைத்தால் நம்முடைய வாழ்க்கையில், தேவனுடைய உண்மையான அர்த்தங்களை எளிதாக தவற விடலாம். 11தீமோத்தேயு 1:2-10 வசனங்களில், தீமோத்தேயுவின் பயம், தன்னுடைய ஊழியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க கட்டாயப்படுத்தியது. அப்பொழுது அப்போஸ்தலனாகிய பவுல், தேவன் அவருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்ய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தார் என்று நினைவுப்படுத்தினார்.

***1இராஜாக்கள் 17: 21** - "இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வரப்பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்." அந்த பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வரப்பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார். பிள்ளையின் ஆத்துமா திரும்பவும் அவனுக்குள் எப்படி வரும் ?

நவீன மொழிபெயர்ப்புகளை நாம் பார்க்கும்போது 1இராஜாக்கள் 17:21ம் வசனத்தில் சிந்தனை - "....... இந்த பிள்ளையின் ஜீவன் திரும்ப அவனிடம் வரவேண்டும் ...." என்று கூறப்படுகிறது. நெபேஷ் (nephesh) என்ற எபிரெய வார்த்தை, King James பதிப்பில் "ஆத்துமா" என்றும் புதிய மொழி பெயர்ப்பில், "ஜீவன்" என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஸ்டிராங்கஸ் எண் - 5315. இதற்கு "சரியாக சுவாசிக்கும் ஒரு பிராணி" என்று பொருள், நெபேஷ் என்ற எபிரெய பதம், நாபேஷ் என்ற மூல வார்த்தையிலிருந்து வந்தது. (ஸ்டிராங்கஸ் 5314) இதற்கு "சுவாசிப்பது" என்று பொருள்.

எலியா ஜீவனுக்குரிய சுவாசத்திற்காக அல்லது தேவன் ஆதாமின் நாசியில் ஊதி , அவர் ஜீவாத்துமாவானது போல அந்த பிள்ளை மீண்டும் ஜீவனை பெறும்படி அவர் வேண்டினார். "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே

உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்." (ஆதியாகமம் 2:7). கூடுதலாக, அந்த பிள்ளை மரித்தபோது அவனுடைய ஆத்துமா வேறெங்கும் இருந்ததாக வசனங்கள் கூறவில்லை. எலியாவின் ஜெபத்தை (எசேக்கியேல் 18:4) தொடர்ந்து, அவன் ஜீவனை பெறும் வரையில் அந்த பிள்ளை அல்லது ஆத்துமா மரித்திருந்தது.

✶ **சங்கீதம் 55 : 15** "மரணம் அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக; அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்குவார்களாக; அவர்கள் வாசஸ்தலங்களிலும் அவர்கள் உள்ளத்திலும் பொல்லாங்கு இருக்கிறது.." சத்துருக்கள் உயிரோடே நரகத்திற்குள் (பாதாளம்)எப்படி இறங்க முடியும் ?

நம்முடைய நவீன நாட்களில், "அவர்களுடைய பாதைகளில் அவர்கள் இறந்து போயிருக்கலாம்" என்ற வாக்கியத்தை நமக்கு அல்லது தேவனுக்கு எதிராக செயல்படும் நம்முடைய எதிரிகளைப்பற்றிய நம்முடைய நம்பிக்கையை விவரிக்கிறது. சங்கீதம் 55:15ம் வசனத்தில் தாவீது இராஜா பயன்படுத்தின பேச்சு நடையை சரியாகவும், சுருக்கமாகவும் கூறப்பட்டு, அவருடைய சத்துருக்கள் ஜீவனோடு இருக்கும்போதே, அவர்கள் எவ்வாறு நிறுத்தப்பட்டார்கள் என்று விவரிக்கிறது. வெளி 19:20ம் வசனத்தில் பாபிலோனின் அழிவை குறித்து பேசும்போது (மிருகம், கள்ளதீர்க்கதரிசிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள்) பாபிலோன் (ஒருநபர் அல்ல, அது ஒரு அமைப்பு) தேவனுக்கு எதிராக சுறுசுறுப்பாக போராட்டம் நடத்தி கொண்டிருக்கையிலே அது அழிக்கப்படும் என்று உயிர்த்தெழுந்த இயேசு கூறுகிறார். சங்கீதம் 55:15ல் "பாதாளம்" என்ற வார்த்தை "ஷியோல்" என்ற எபிரெய வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். இது உபத்திரவத்தின் இடத்தை விவரிக்காமல், ஒரு மரித்த நிலையை அடையாளப்படுத்துகிறது. யாக்கோபு யோசேப்பை முன்னதாகவே இழந்ததினால், இனி பென்யமீனை இழந்தால் (ஆதியாகமம் 42:38) அவர் துக்கத்தோடு ஷீயோலில் (பாதாளத்தில்) இறங்குவதாக கூறினார். யாக்கோபு மற்றும் தாவீதை போல நாமும் எப்போதும் சத்தியத்தை பேசவேண்டும். மேலும், நம்முடைய பரலோக தந்தை மற்றும் அவருடைய சத்தியத்தின் வல்லமை எந்த விதமான கைமாறு செய்யும் நீதியான செயல்களை செய்வதற்கு நாம் விடவேண்டும்.

பதிப்பாசிரியரின் குறிப்பு - அல்லது எதிரிகள் சுறுசுறுப்பாக செயல்படும்போதே, தேவன் அவர்களை கொல்லவேண்டும் என்று தாவீது தேவனிடம் வேண்டியிருக்கலாம்.

✶ **1பேதுரு 3:18-19** "ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.

அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்." கிறிஸ்து மரித்து காவலில் உள்ள ஆவிகளுக்கு அவர் எவ்வாறு பிரசங்கிக்க முடியும் ?

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின், ஒரு குறுகிய காலப்பகுதியில், அவரோடு நேரடியாக நடந்த உரையாடலுக்கு பின் பேதுரு இதை எழுதினார். அந்த கால பகுதியை குறித்து வேதாகமத்தில் பதிவு செய்யப்படாத பல காரியங்கள் அப்போஸ்தலர்களுக்கு அறிவிக்கப்பட்டது. (யோவான் 21:25) காவலில் உள்ள ஆவிகள் விழுந்து போன தூதர்கள். (வசனம் 20, 11பேதுரு 2:4, மற்றும் யூதா 6) இந்த ஆவிகள் ஏதோ ஒரு அதிகார எல்லைக்குள் , ஒரு நியாயத்தீர்ப்புக்காக காத்திருப்பதை பின்வரும் இரண்டு வசனங்களில் குறிப்பிடப்படுகிறது. நியாயத்தீர்ப்பு (krisis) என்பதற்கு முடிவான தீர்ப்பு என்பதற்கும் மேலாக, சோதித்தறிதல் என்று பொருள்படுகிறது. ஆகவே காவலில் உள்ள சில ஆவிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று தோன்றுகிறது.

இவைகள் நிகழ்ந்தபோது, இயேசு ஆவிக்குரிய ஜீவியாக உயிர்த்தெழுந்திருந்தார். "அந்த ஆவியிலே அவர் போய்" என்ற வார்த்தைகளின் பொருள், முந்திய வேத வசனத்தின் செயல்பாட்டின் விளைவாக உள்ளது. (இதற்கு அப்போஸ்தலர் 6:10, 1கொரிந்தியர் 15:2, எபிரெயர்11:4ம் வசனங்களோடு ஒப்பிட்டுபார்க்கலாம்.) ஆகவே, இயேசு ஆவியின் ஜீவியாக எழும்பினதால், காவலில் உள்ள ஆவியினிடத்திற்கு சென்றார். இயேசு ஆவியின்

ஜீவியாக இருந்ததினால் அங்கு செல்வதற்கு அவர் அனுமதிக்கப்பட்டார். (G4198, "அவர் போய்")

ஆண்டவருடைய பரிவான குணத்தை இது எடுத்துக்காட்டுகிறது. அதாவது ஒரு காயப்பட்ட பலவீனர் கூட அவரால் புறக்கணிக்கப்படுவதில்லை. சகோதரர்கள் சிறை ஊழியங்களுக்கு சென்றாலும், ஆவியில் பலவீனர்களையும் அல்லது விழுந்துபோன நிலையில் இருபோர்களின் மேல் முயற்சிகள் எடுப்பதற்கு, அவர்களுடைய திரி மங்கிய நிலையிலாவது எரிய வேண்டும்.

பதிப்பாசிரியரின் குறிப்பு: அதிகமாக நம்பத்தக்கதாக இயேசு, மாதிரிகளின் வழியாக பிரசங்கித்தார். மரண பரியந்தம் அவர் விசுவாசமுள்ளவராக தன்னை காத்துகொண்டது, விழுந்து போன தூதர்களுக்கு அவர் பிரசங்கிக்கிற பாடமாக விளங்கியது.

பதிப்பாசிரியரின் குறிப்பு: "கிறிஸ்துவும் ஒரு முறை பாவங்களுக்காக மரித்தாரே" (1பேதுரு 3:18) என்று ஒரு சிறந்த கைபிரதியில் காணப்படுகிறது.

**✶ மத்தேயு 5 : 22** "தன் சகோதரனை மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்... " என்றும் சொல்லப்பட்டதற்கும், "கெஹன்னாவின் அக்கினிக்கு" என்று புதிய மொழிபெயர்ப்புகளில் சொல்லப்பட்டதற்கும் உள்ள வேறுபாடு என்ன ?

மூன்று கிரேக்க வார்த்தைகள், குழம்பும்படியாக, அனைத்தும்"நரகம் " மற்றும் (பாதாளம்) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது : *ஹேடஸ், கெஹன்னா மற்றும் டார்டரஸ்.*

*ஹேடஸ்* ("புலப்படாத", 10 முறைகள் பயன்ப்படுத்தபட்டுள்ளது )பழைய ஏற்பாட்டில் எபிரெய மொழியில் ஷீயோல் என்று (சங்கீதம் 16:10, அப்போஸ்தலர் 2:27) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஹேடஸ் என்பதற்கு மரண நிலை என்றும், குறிப்பாக ஆதாமின் மரண நிலை என்றும், (முழு மனுக்குலமும் இதன் வழியாகவே பிறந்தது ) பொருள்படுகிறது. ஹேடஸ் மரித்த அனைவரையும் ஒப்புவிக்கவேண்டும். (வெளி 20: 13-15)


*டார்ட்டரஸ்* ( 1Iபேதுரு 2:4ல் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ) பழங்கால கிரேக்கர்களுக்கு இது "ஒரு இருளான படுபாதாளம், ஹேடஸ்க்கு கீழ் வெகு ஆழத்தில், பரலோகத்திற்கு கீழ் பூமியை போல, அசுரர்களின் சிறையாக இருந்தது. (Liddell&Scott,abridge edition 1880 ) ஜலப்பிரளயத்திலிருந்து விழுந்துபோன தூதர்களின் நிலையை டார்டரஸ் விவரிக்கிறது. அதுமுதற்கொண்டு இவர்கள் மனுஷ சரீரத்தை எடுக்கும் ஆற்றலையும் இழந்துவிட்டார்கள்.

*கெஹன்னா* (இன்னோம் பள்ளத்தாக்கு - 12 முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது) எருசலேமின் தென்மேற்கு பகுதியில் ஒரு குப்பை குழி இருந்தது. அதில் எறியப்படும் குப்பைகளை உடனடியாக அழித்துப் போட தொடர்ந்து அக்கினி அதில் எரிந்து கொண்டே இருக்கும். கெஹன்னா, "அக்கினி கடல்" என்ற இரண்டாம் மரணத்தை அடையாளப்படுத்துகிறது. (வெளி 20 :10, 14:15) மாள்வு - மறைவு.

பல முறைகள் கெஹன்னா, இப்போது உள்ள சபைக்கு எச்சரிப்பாக உள்ளது. ஆனால் இரண்டு முறை பரிசேயர்களிடம் பேசப்பட்டது. (மத்தேயு 23:15,33) சதுசேயர்கள் இவர்களை காட்டிலும் குற்றவாளிகளாக இருந்த போதிலும் அவர்களிடம் இந்த வார்த்தை பேசப்படவில்லை. மரணத்திற்கு பின் சதுசேயர்கள் எதையும் காண்பதில்லை. ஆகவே அவர்களுக்கு "இரண்டாம் மரணத்தை" பற்றி புரிந்துகொள்ள முடியாது. பரிசேயர்களால் கூடும், நாமும் அறிந்திருக்கிறோம்.

(2) கீழ்காண்பவைகளை குறித்த கடினமான வசனங்கள்

# தேவன் மற்றும் பரிபூரணம்



*ஏசாயா 45:5, 1கொரிந்தியர் 4:4, 1கொரிந்தியர் 8:5 ஒரே கடவுளா ? இந்த வசனங்களை ஒன்றோடு ஒன்றாக உபாகமம் 6:4ம் வசனத்தோடும் நாம் எவ்வாறு இசைவுப்படுத்துவது ? "நானே கர்த்தர், வேறொருவர் இல்லை; என்னைத்தவிரத் தேவன் இல்லை." (ஏசா 45:5)

யெகோவா தேவன் இங்கு கோரேசோடு பேசுகிறார். இஸ்ரயேலின் நலனுக்காக கோரேஸை அவர் பலப்படுத்துகிறார் என்று கோரேஸக்கு தெரிவிக்கிறார். இவைகளை வேறு எந்த கடவுளும் செய்யவில்லை - யேகோவா தேவன் - மட்டுமே - இவைகளை செய்கிறார் என்பதை கோரேஸ் அறிந்துகொள்ளவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

யெகோவாவை போல - அழியாமையுள்ளவரும் நித்தியமானவரும் வேறு ஒரு தெய்வமும் இல்லை என்று அக்காலத்தில் தேவன் கூறினார். அவர் தன்னந்தனியாக தாமே இருந்தார், இஸ்ரயேலின் தேவனும், **தன்னில் தான் ஜீவனுடையவருமாக** இருந்தார். (யோவான் 5:26) பின்னர் இந்த அழியாமை என்னும் சொத்தை தம்முடைய குமாரனாகிய இயேசுவுக்கு அவருடைய உயிர்த்தெழுதலின் போது கொடுத்தார். (1தீமோத்தேயு 6:15-16, 1கொரிந்தியர் 15:27,28, எபிரெயர் 1:1-4) இப்படியாக தேவன் கோரேஸை நோக்கி - "நான் யெகோவா,.....நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்."இவைகளை நாம் காணும்போது, யெகோவா அல்லது யாவே என்ற ஒருவர் மட்டுமே உண்டென்று தேவன் கூறுகிறார். இவரை தவிர வேறொருவர் இல்லை என்கிறார். நானே கர்த்தர், வேறொருவர் இல்லை; என்னைத்தவிரத் தேவன் இல்லை. ....நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்.நான் உனக்கு இடைக்கட்டு கட்டினேன்; நானே கர்த்தர், வேறொருவர் இல்லை."இந்த யெகோவா தேவன் யார் என்பதை புரிந்துகொள்ள கோரேஸக்கு இது போதுமானதாக இருந்தது. இந்த காரியத்தை குழப்பி கொள்ளாமல், தேவனுக்கு லோகாஸ் என்ற ஒரு குமாரன் இருக்கிறார் என்றும் அவரும் ஒரு தேவன் என்றும் விளக்கம் அளிக்கப்படுகிறது. (சங்கீதம் 110:1) உண்மையில், அநேக தேவர்கள் உண்டென்று 1கொரிந்தியர் 8:5 ம் வசனம் கூறுகிறது. அதாவது, 11கொரிந்தியர் 4:4ம் வசனம், சாத்தானை இந்த உலகத்திற்கு தேவனென்று கூறுகிறது. (theos)உபாகமம் 7:1ல் பார்வோனை காட்டிலும் வல்லமையுள்ளவராக மோசேவை ஒரு தேவனாக (elohiym) கூறிப்பிடுகிறார். ஆனால் உண்மையில் பலர் தேவன் என்று அழைக்கப்பட்டாலும், ஏசாயா 45ம் அதிகாரத்தில், தன்னில் தானே ஜீவனுடையவராக இருக்கும் இந்த தேவன் - நித்தியமானவரும், இஸ்ரயேலின் தேவன் என்று அடையாளம் உள்ளவரும் - கோரேஸக்கு உதவினவருமாக ஒரே யெகோவா தேவனாக,இருக்கிறார்.

விசுவாசமாக இருந்தால், கிறிஸ்தவர்களுக்கும் இதே தெய்வீக சுபாவம் கொடுக்கப்படும். "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலேநமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." (11பேதுரு 1:4, 1யோவான் 3:2) திவ்விய சுபாவத்தில் இருக்கக்கூடியவர்கள் நித்தியத்திற்கும் தேவனோடு ஒப்பந்தத்தின் மூலம் ஒன்றிணைந்திருப்பார்கள். தேவனுக்கு மேலாகவோ, சமமாகவோ இராமல் இவர்கள் தேவனுக்கு கீழ் இருப்பார்கள். எனவே நித்தியத்திற்கும், "உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார்; அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல." (உபாகமம் 10:17)

**✶சங்கீதம் 82 :2,6** "எதுவரைக்கும் நீங்கள் அநியாயத்தீர்ப்புச்செய்து, துன்மார்க்கருக்கு முகதாட்சிணியம் பண்ணுவீர்கள். நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன்." எத்தனை தேவர்கள் இருக்கிறார்கள் ? இது ஓர் இறை வழிபாடா ?

யாவருக்கும் மேலாக ஒரே தேவன் உண்டு இவர் தேவர்களுக்கு தேவனானவர் (சங்கீதம் 136: 2, உபாகமம் 10:17) எல்லோஹீம் (Elohim ) என்ற வார்த்தை யெகோவா தேவனுக்கும் மற்றும் அவருக்கு கீழ்பட்டிருக்கும் தேவர்களுக்கும் பயன் படுத்தப்பட்டுள்ளது. சர்வத்திற்கும் மேலான தேவன் தேவர்கள், ஆராதிக்கப்படும் எந்த பொருட்களுக்கும், எல்லோஹீம் (Elohim ) என்ற வார்த்தை பொதுவாக பயன்படுத்தக்கூடியது. (இனம்) சங்கீதம் 82 ல் சர்வவல்லமையுள்ள தேவனுக்கும், தேவர்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. உபாகமம் 6:4ம் வசனத்தில், யேகோவா தேவன் எல்லோஹீம் என்றும் அவர் ஒருவரே தேவன் என்றும் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆகவே எல்லோஹீம் ஒருமைக்கும் பயன்படுத்தப்படலாம் என்று காண்பிக்கப்படுகிறது. சர்வத்திற்கும் தேவனானவருக்கு, கீழ்பட்டிருக்கும் தேவர்களுக்கு பிரதான தேவன் இயேசு என்று எபிரெயர் 1:9 மற்றும் சங்கீதம் 45:7ம் வசனங்களிலும் சாட்சியிடுகிறது. 1கொரிந்தியர் 8:6ம் வசனத்தில் தேவனே **சர்வத்திற்கும் காரண கர்த்தரும் ஊற்றுமானவர்.** அதே நேரத்தில் ஆவிக்குரிய சுபாவத்தில் இயேசு இருந்தாலும் அவர் சகலமும் உண்டாவதற்கு வழியாக இருந்தார்.

சாத்தானும் தேவன் என்று அழைக்கப்படுகிறான் (2கொரிந்தியர் 4:4) தூதர்களும் தேவர்கள் என்று சங்கீதம் 95:3ல் குறிப்பிடுகிறது. இவர்கள் மத்தியில் சேராபீன்கள் மற்றும் கேரூபீன்கள் போன்ற தூதர்களின் அணிவரிசை அவர்கள் மத்தியில் காணப்படுவதாக ஏசாயா 6:2 மற்றும் 37:16ம் வசனங்கள் குறிப்பிடுகிறது. தேவனுடைய வார்த்தைகளை யூதர்கள் பெற்றிருந்ததினாலே, அவர்களையும் தேவர்கள் என்று அழைத்தார். (யோவான் 10 :34-35) மேலும் வெளி 14:1 மத்தேயு 25:31, சகரியா 14:5, மற்றும் யூதா 15ம் வசனங்களில் தூதர்கள் / பரிசுத்தவான்களும் தேவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆகவே தேவன் என்ற வார்த்தை மிகுந்த வல்லமையுள்ள யாவருக்கும் எளிமையாக பொருந்தக்கூடிய வார்த்தையாக உள்ளது.

வேதாகமம் எடுத்துக் காட்டும் தேவனுடைய சுபாவம், முன்வைத்து திரித்துவத்தை நம்புபவர்களுக்கு உதவி செய்ய இந்த கருத்தை புரிந்து கொள்வது மிக அவசியம். ஒருவருடைய தெரிந்துகொள்ளுதலை உறுதிசெய்துக் கொள்வதற்கு இந்த புரிந்து கொள்ளுதல் உகந்ததாக தோன்றுகிறது. (வெளி 20:4)

ஆசிரியரின் பதிப்பு: "உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார்; அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல." (உபாகமம் 10:17) என்பவை வேதாகமத்தில் ஒரே கடவுள் என்ற கோட்பாடு, அவருக்கு கீழ் இருக்கும் இசைவுள்ள தேவர்களாகிய 144000 கிறிஸ்துவின் மணவாட்டியையும் அனுமதிக்கிறதை காட்டுகிறது.

**✶ஆதியாகமம் 1 : 26, 27, 5:1** "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." (ஆதியாகமம் 1:26,27) "**ஆதாமின் வம்சவரலாறு: தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே அவனைத் தேவசாயலாக உண்டாக்கினார்.**" (ஆதியாகமம் 5:1) ஆதியாகமம் 1:27ம் வசனத்தில், ரூபம் என்ற வார்த்தை காணப்படவில்லை. அதே போல ஆதி 5:1ம் வசனத்திலும் அந்த வார்த்தை காணப்படவில்லை. இப்படியிருக்க மனுஜன் தேவனுடைய ரூபத்தில் சிருஷ்டிக்கப்பட்டாரா ? அல்லது தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவரா ? அல்லது தேவ சாயலிலும் ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டாரா ?

ஆதாம் மற்றும் ஏவாள் துவக்கத்தில் தேவனுடைய ரூபத்தில் சிருஷ்டிக்கப்பட்டார்கள் - சரி மற்றும் தவறை வேறுப்படுத்தி அதை அறிந்துகொள்ள சாத்தியமாக இருந்தது. அவர்கள் பாவம் செய்த போது தீமையையும் (துரதிஷ்டம்), நன்மையையும் புரிந்து கொண்டதன் நிமித்தமாக இந்த கோணத்தில் அவர்கள் தேவனை போலானார்கள். ஆனால் இப்போதோ தேவனுடைய ரூபம் சீர்குலைந்தது. (ஆதி 3:22,5:1) மனுக்குலம், கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியில் "தேவனுடைய ரூபத்தை" திரும்ப பெறும்வரையில் சிருஷ்டிப்பின் 7ம் நாள் முடிவு பெறாது, அப்போது ஜனங்கள் அனைவரும் தேவ சாயலையும் தேவ ரூபத்தையும் பெற்றிருப்பார்கள். **"எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகை செய்யவேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்."** (1கொரிந்தியர் 15:25-26)

***ஆதியாகமம் 2 : 2** ஏழாம் நாளில் தேவன் ஏன் ஓய்ந்திருக்கவேண்டும் ?

இயல்பான உழைப்பிலிருந்து விலகியிருப்பதற்கு இஸ்ரயேலர்கள் ஏழாம் நாளை ஓய்வு நாளாக அனுசரித்தார்கள். (யாத்திராகமம் 20:11) விசுவாச குறைச்சலினால், அவர்கள் முழுமையாக அந்த ஓய்வுநாளுக்குள் என்றுமே பிரவேசிக்கவில்லை. மேலும், கானான் தேசத்திற்கு சென்ற வேவுக்காரர்கள் அங்கு இராட்சதர்கள் இருப்பதினால் அந்த தேசத்தை கைப்பற்ற முடியாது என்ற தவறான தகவல்களை சொன்னதினால், தேவன் அவர்களுக்கு வாக்களித்த தேசத்தை தருவேன் என்று சொன்ன தேவனுடைய வார்த்தைகளை அவர்கள் நம்பவில்லை. அதற்கு எதிரிடையாக தேவனுடைய கட்டளைகளை கீழ்படிவதினால் பரம கானானின் இளைபாறுதலுக்குள் பிரவேசிக்க முடியும் என்ற விசுவாசத்தை தேவனுடைய ஜனங்கள் பெற்றிருக்கவேண்டும் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். தேவனுடைய விஷயத்தில் அவருக்கு இளைப்பாறுதல் வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் பாவத்தின் விளைவுகளை மனுக்குலம் கற்றுகொள்ள வேண்டும் என்று தேவன் அவருடைய சிருஷ்டிப்பின் வேலைகளிலிருந்து சற்று ஓய்வு எடுத்தார். அவர் இம்மைக்கான சிருஷ்டிப்பின் வேலைகளிலிருந்து 7000 வருடங்கள் ஓய்வெடுத்து கொண்டிருக்கிறார். அதுவரையில் தேவனுடைய திட்டத்தின் மற்ற அம்சங்கள் கிரியைகள் செய்து கொண்டிருக்கிறது. இந்த ஓய்வு மனுஷனுக்காக, தேவைப்பட்டதே தவிர தேவனுக்காக அல்ல.

ஆசிரியரின் பதிப்பு - மற்றொரு கோணத்தில், "புது சிருஷ்டிகளின்" வேலைகளை துவங்குவதற்கு முன் (11கொரி 5:17) தேவன் சுமார் நாலாயிர வருடங்கள் ஓய்ந்திருந்தார். தேவன் சோர்வடைவதில்லை, ஆனால் அவருடைய திட்டத்தில் ஒரு இடை ஓய்வு உண்டு.

***ஆதியாகமம் 6:6-7** தேவன் பாவம் செய்யாமல் அவர் எப்படி மனஸ்தாபம் பட முடியும் ?

மனஸ்தாபம் என்பதற்கான எபிரெய வார்த்தைக்கு துயரப்படுதல் அல்லது ஒருவருடைய மனதை மாற்றுதல் அல்லது ஒருவருடைய செயலை மாற்றுவது என்று பொருள். (சங்கீதம் 110:4ம் வசனத்தில் சொல்லப்படுவது போல) தேவனுடைய மனதை அவர் மாற்றிகொள்வது கூடாத காரியம், ஆகவே அவர் மனுக்குலத்தோடு தொடர்பு கொண்டிருந்த விதத்தை மாற்றிகொண்டதை போல தோன்றுகிறது. துன்மார்க்கத்தின் நிமித்தமாக, தேவன் அவருடைய நடைமுறையாட்சியை மாற்றி கொண்டதினால், நோவா மற்றும் அவருடைய குடும்பத்தை தவிர முழு மனுக்குலமும் ஜலப்பிரளயத்தினால் அழிந்ததே அதன் விளைவானது. அதற்கு ஏற்றவாறு மனுக்குலத்திற்கான அவருடைய இரட்சிப்பின் திட்டத்தை அவர் மாற்றி கொள்ளவில்லை. ஏனெனில், அவருடைய நேச குமாரனின் பலியின் இரத்தத்தினாலே மனுக்குலத்தை மரணத்திலிருந்து மீட்க வேண்டும் என்பது அவருடைய திட்டமாகவே இருந்தது.

***யாத்திராகமம் 6:3** ஆதியாகமம் 14:22 வசனத்தில் ஆபிரகாம் முன்னதாகவே யெகோவா தேவனை சாட்சியாக அழைத்திருக்க, தேவன் மோசேவிடம் தன்னைமுதல் முதலாக அறிமுகப்படுத்துவது எப்படி ? அவரே ஒரே தேவன் என்று அழைப்பது சரியானதா ?

ஒன்றுக்கு மேல் நம்பத் தகுந்த பதில்கள் உண்டு.

(a) மோசே ஆதியாகமத்தை எழுதினார், ஆகவே உன்னதமான தேவனை விவரிப்பதற்காக மோசே வார்த்தைகளை தேர்வு செய்தார்.

(b)ஆபிரகாம் ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கு தேவன் செய்த வல்லமைமிக்க செயல்களினால் தேவன் எல்ஷடாய் (El Shaddai) - சர்வவல்லமையுள்ள தேவன் என்று அவர்களுக்கு அறியப்பட்டார். ஆனால் தேவன் இஸ்ரயேல் ஜாதியை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்து, அவர் வாக்களித்த தேசத்தை கொடுத்தபோது தான், யெகோவா என்ற பெயருக்கு வருங்காலத்தையும் அறிவார் என்பது பொருள் என்று வெளிப்பட்டது.

(c) தேவன் உறுதியாக எதையும் கூறாமல், ஆற்றல்மிக்க ஒரு கேள்வியை கேட்கிறார் "யெகோவா என்ற என்னுடைய பெயரால் அவர்களுக்கு நான் அறியப்படவில்லையா ? "

கருத்து - யேகோவா(YHWH, YaHaVaH,Yahwah) என்ற நாமத்தை ஆபிரகாம் ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கு மட்டும் அல்ல ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கும், லாபானுக்கும் பெத்துயேலுக்கும், ரெபெக்காலுக்கும் அறிந்திருந்தார். (ஆதியாகமம் 24:12,27, 24:31,50, 25:22-23) மோசே பிறப்பதற்கு நீண்டக் காலத்திற்கு முன்னதாகவே ஆதியாகமத்தில் யெகோவா என்ற நாமம் 164 முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தேவனுடைய நாமம் மற்றும் பயன்படுத்தபடும் தலைப்புகள் கீழ்காணும்படிக்கு :

**யேகோவா:** (YHWH அல்லது அது போன்ற வார்த்தைகள் வருங்கால ஜீவி : 6960 முறைகள்)

**ஜா அல்லது யா** ( Yah: வருங்காலம், தொடர்ந்து அல்லது நித்தியமான, 49 முறைகள் பயன் படுத்தப்பட்டுள்ளது.)

**தேவன்** - (El,Eloh, Elohim) வல்லமையுள்ள 238, 94, 2602 முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.)

**ஆண்டவர்** (Adonai :எஜமான், 434 முறைகள்)

**உன்னதமான தேவன்** (El Elyon ;28முறைகள்)

**சர்வவல்லமையுள்ள தேவன்** (El Shaddai ; 7 முறைகள்)

சரியாக இருப்பதற்கு, நாம் இந்த நாமங்களையும், தலைப்புகளையும் பற்றி நாம் கண்டிப்பாக சிந்திக்கவேண்டும். தேவனை ஒரு உரிமையாளர் அல்லது அனைத்திற்கும் உக்கிரானக்காரராக வலியுறுத்தப்பட்டால், "ஆண்டவர்" என்ற வார்த்தை பொருத்தமாக இருக்கும். வல்லமை, தீமையை அழித்தல் அல்லது ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்கு "தேவன் என்ற நாமம் சிறந்தது. தொடர்ந்து இருக்கிறவராக இருக்கிறார் மற்றும் நித்தியவாசி என்பதற்கு யெகோவா என்ற நாமம் சிறப்பானது.

மற்ற எல்லா தலைப்புகளை இணைத்துப் பார்க்கும்போது, "யாவே" (Yahweh) என்ற நாமம் இரண்டு மடங்கிற்கும் அதிகமாக வேதாகமத்தில் பயன்படுத்தபடுகிறது. (இந்த நாமம் பரிசுத்தமானது மேலும் இந்த நாமத்தை பயபக்தியோடும், கனிவோடும் பயன்படுத்தவேண்டும்) ஆயினும், ஒவ்வொரு நாமமும், தலைப்பும் இடத்திற்கு ஏற்றவாறே பொருத்தப்படவேண்டும்.

"யெகோவா" என்ற நாமம் அடிக்கடி பயன்படுத்தப்படாததினால், யார் ஒருவர் பாதிக்கப்பட்டாலும், அந்த கிறிஸ்தவர் அதை அடிக்கடி பயன்படுத்தலாம். "யெகோவா" என்ற நாமம் மிக குறைவாக பயன்படுத்தப்படுவதினால் யார் ஒருவர் பாதிக்கப்பட்டாலும், "யாவே" என்ற நாமம் பயன்படுத்தவதற்கு பொருத்தமாக இருக்கும். "கர்த்தர் அல்லது ஆண்டவர்" என்ற நாமம் அச்செழுத்தில் புரிந்து கொள்ளப்படும். ஆனால் பேசப்படும்போது அது தெளிவற்றதாக இருக்கலாம். ஆகவே, "யாவே" அல்லது யெகோவா" என்ற நாமத்தை பயன்படுத்துவது சிறந்ததாக இருக்கும்.

***யோவான் 1:18** "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார். " இயேசு ஒரே பேரான தேவனாக எப்படியிருக்க முடியும் ?

"தேவன்" என்ற வார்த்தை (theos ) தியோஸ் என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. (elohim) எல்லோஹீம் என்ற எபிரெய வார்த்தையை போல தேவன் உள்பட தூதர்கள், இயேசு இன்னும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மனுஷருடைய அதிகாரத்திற்கும் அந்தஸ்துக்கும் தகுந்தபடி, எந்த

ஒரு உயர்பதவியாளருக்கும் குறிப்பிடப்படலாம். விசேஷமாக உன்னதமான தெய்வத்துவத்தை கொண்டிருப்பவர் தேவன் என்று ஸ்டிராங்கஸ் அகராதி விளக்கம் அளிக்கிறது - "உருவகமாக யூத மார்க்கத்தின் ஒரு நியாயாதிபதி" இந்த வார்த்தை ஒரு நியாயாதிபதியை விவரித்தால், இது இயேசுவையும் குறிப்பிடலாம். மேலும், புதிய ஏற்பாட்டில், ஆறு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. (யோவான் 1:1, 18, 20:28, தீத்து 2:13, எபிரெயர் 1:8, 11பேதுரு1:1) யேகோவா தேவனை ஆராதிப்பவர்களாக, யோவான் 10:35ம் வசனத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு முறை இது சாத்தானையும் குறிப்பிடப்படுகிறது. (11கொரிந்தியர் 4:4)

யோவான் 1:18(சிறந்த கைபிரதிகளில்) பொதுவான மொழிபெயர்ப்புகளில் ஒரே பேறான குமாரன்" என்று காணப்பட்டாலும், இன்னும் சரியாக சொல்லவேண்டுமானால், யோவான் இயேசுவை "ஒரே பேறான தேவன்" என்று விவரிக்கிறார். இரண்டுமே ஒத்துக்கொள்ளப்படுகிறது. "ஒரே பேறான குமாரன்" என்ற வார்த்தைகள் புகழ்பெற்ற வேத பகுதியாகிய, யோவான் 3:16 ல் இயேசுவுக்கு பயன்படுத்தப்படுகிறது. ஆனால், முன்னதாகவே இயேசுவை "லோகாஸ்" என்றும் அதாவது உயர் நிலை தேவன் (theos) தியோஸ் என்றும் யோவான் 1:14ம் வசனத்தில் "பிதாவுக்கு ஒரே பேறானவர்" என்றும் இயேசுவை விவரித்திருப்பதினால், குறிப்பாக யோவான் 1:18ம் வசனத்தில் இது பயனுள்ளதாக உள்ளது. இப்படியாக, "ஒரே பேறான தேவன்" என்ற வெளிப்பாடு இரண்டு விளக்கங்களையும் இணைத்து பிதாவுக்கும் (யெகோவா). குமாரனுக்கும் (இயேசு) உள்ள வித்தியாசத்தை அதாவது இருவரும் தனித்தனியே வல்லமையுள்ளவர்கள் என்று தெளிவாக பிரித்து காட்டுகிறது.

**✶ ரோமர் 9:13,18, 21-22; மல்கியா 1:2-4 :** தேவன் எப்படி யாக்கோபை நேசித்து ஏசாவை வெறுக்க முடியும் ?

யாக்கோபும், ஏசாவும், ஈசாக்கு மற்றும் ரெபேக்காளுக்கு பிறந்த இரட்டை பிள்ளைகள் (ஆதியாகமம் 25:21-27) ஏசா மூத்த பிள்ளையாக இருந்ததினால், சேஷ்டப்புத்திரபாகத்தினால் வரும் ஆசீர்வாதம் அவருக்கு நியமிக்கப்பட்டிருந்தாலும், தேவன் அவருடைய தாத்தாவாகிய ஆபிரகாமுக்கு செய்த உடன்படிக்கையையும், தம்முடைய தகப்பனிடத்தில் உறுதி செய்த அந்த வாக்குத்தத்தம் மற்றும் உடன்படிக்கையின் மதிப்பை ஏசா உணரவில்லை (ஆதியாகமம் 22:16- 18, 26:2-5) இந்த வாக்குதத்தத்திற்கும், உடன்படிக்கைக்கும் யாக்கோபு மிகுதியான மதிப்பையும், ஆசீர்வாதத்தையும் வைத்திருந்ததினாலும், ஏசா அதை கவனியாமல் விட்டு விட்டதாலும், ஒரு வேளை பயற்றங்கூழை கொடுத்து அந்த சேஷ்டப்புத்திர பாகத்தை யாக்கோபு ஏசாவிடமிருந்து விலைக்கு வாங்கினார். (ஆதியாகமம் 25:29-34) தேவன் யாக்கோபை அதிகமாக நேசிக்கும் படிக்கு இது வழிநடத்தியது. ஏசாவை குறைவாக நேசித்தார். இதற்கான சரியான கிரேக்க வார்த்தை (miseo)மிசியோ. ரோமர் 9:13ம் வசனத்தில் "வெறுத்தேன்" என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டது.

யூத தேசத்தில் கிறிஸ்துவை பின்பற்றியவர்கள், யாக்கோபு கொண்டிருந்த விசவாசத்தை பிரதிபலித்தார்கள் மேலும், கிறிஸ்தவர்களும் இயேசுவை மேசியா என்று விசுவாசத்தினால், ஏற்று கொண்டார்கள். இதன் காரணமாக, தேவன் ஏசாவை காட்டிலும் யாக்கோபை அதிகமாக நேசித்தார். என்பதை பற்றி அப்போஸ்தலனாகிய பவுல், விளக்கம் அளிக்கிறார். இயேசுவை யூத ஜாதி புறக்கணித்ததினாலே அவர்கள் "கோபாக்கினையில் பாத்திரமானார்கள். இதன் காரணமாக இவர்கள் ஆபிரகாமின் வாக்குத்தத்தின் (ஒலிவ மரத்தின் வேருக்கு) ஆவிக்குரிய சுதந்திரவாளிகளாக மாறுவதற்கான வாய்ப்பிலிருந்து துண்டிக்கப்பட்டார்கள். (ரோமர் 9:22,11:17)இதற்கு இடையில் இயேசுவை ஏற்றுக்கொண்ட தனிப்பட்ட யூதர்களும் புறஜாதிகளும் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவுக்குள் வந்ததினால் "கிருபையின் பாத்திரங்கள்" மாறி, ஆபிரகாமின் வாக்குத்தத்தில் ஒட்டவைக்கப்பட்டார்கள். (ரோமர் 9:23, 11:17) "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." (கலாத்தியர் 3:29)

**✶ஏசாயா 45:7** "ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப்படைத்துத்

தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர். "ஒழுக்கக்கேடு இல்லாத தேவன் தீமையை எவ்வாறு சிருஷ்டிக்க முடியும்? இந்த வேத பகுதி King James மொழி பெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இது பெறும்பாலாக,வழக்கமாக வாசிக்கப்படும் பதிப்பாக உள்ளது.

நம்முடைய ஆராய்ச்சியை துவங்குவதற்கு, நாம் மற்ற வேதாகம மொழிபெயர்ப்புகளையும், ஒப்பிட்டு காணவேண்டும் அதிகமாக அங்கிகரிக்கப்பட்டதும், துல்லியமான மொழிபெயர்க்கப்பட்ட இரண்டு பதிவுகளை நாம் காணலாம்.


"The one forming light and creating darkness,causing well-being and creating calamity:I am the LORD who does all these." - The New American Standard version

"I am Yahweh,and there is none else:Forming light,and creating darkness;making prosperity and creating misfortune –I - Yahweh who doeth all these."-.Rotherham Translation

மீண்டும் நம்முடைய துவக்க கேள்விக்கு செல்லலாம், "ஒழுக்கக்கேடில்லாத தேவன் எப்படி தீமையை சிருஷ்டிக்க முடியும் ? தீமைக்கு (அடைமொழி) பொதுவான விளக்கம் - தவறான நெறிமுறை, ஒழுக்கமற்ற, கெட்ட "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது.." என்று 1 யோவான் 1:5ல் வாசிக்கிறோம். ஆகவே தேவன் இப்படிப்பட்ட தீமைகளை சிருஷ்டிக்கமாட்டார் என்று நியாயமாக காணப்படுகிறது. ஆனால் தீமைக்கு (பெயர் ச்சொல்) பொதுவான விளக்கம். - அதிருப்தி, காயம், வேதனை, பாடுகள் போன்றவைகளை உண்டுபண்ணும் எதுவும் தீமையாகும். "ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப்படைத்துத் தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்." (ஏசாயா 45:7) தேவன் இந்த விசேஷித்த குணங்களைப் பயன்படுத்தி மனுக்குலத்திற்கு உபதேசங்களையும், பயிற்சியையும் தருகிறார். தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் தீயோர் அல்ல இல்லை (ஸ்டிராங்கஸ் 7451) King Jamesபதிப்பில் தவறாக அனுமானிக்கப பட்டிருக்கலாம். (see also Studies in the Scriptures,Volume 1,pg 125 footnote )

(8) கீழ்காண்பதை குறித்த கடினமான வசனங்கள்

# பிராயச்சித்தம் (ஒப்புரவாக்குதல்)



**யோவான் 1:14** "அந்த வார்த்தை மாம்சமாகி,. ."இதன் என்ன பொருள்? துவக்கத்தில் அந்த வார்த்தை மாம்சமாக இருக்கவில்லை (ஆவியின் சுபாவத்தில் ) என்ற பொருளை மட்டுமே இது தரக்கூடும், ஆயினும் அவர் இந்த ஆவியின் சுபாவத்திலிருந்து மாம்சமான மனுஷ சுபாவத்திற்கு உருமாற்றம் அடைந்தார். (அவர் மரியாளிடம் கருத்தரிக்கப்பட்டது, கலாத்தியர் 4:4) - சுபாவத்தில் ஒரு உண்மையான மாற்றம். (உயர்த்தெழுதலின் போது அவர் மறுபடியும் உருமாற்றம் அடைந்தார் - மனித சுபாவத்திலிருந்து திவ்விய சுபாவத்திற்கு - சிருஷ்டிகளில் (சுபாவம்) மிக உயர்வான நிலை)

***எபிரெயர் 2:10** - "அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப் படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது. **எபிரெயர் 5:8,9** "அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு. **எபிரெயர்9:28** "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிற வர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.." இயேசு பாவமற்றவராக இருந்தால், அவர் எவ்வாறு பரிபூரணமாக மாற்றப்பட்டிருக்க முடியும் ? அவர் ஏன் பரிபூரணமாக மாற்றப்படவேண்டும் ?

எபிரெயர் 5:8-10 வசனங்களை ஆங்கிலத்தில் பிலிப்பின் மொழிபெயர்ப்பு அருமையாக பதிவு செய்துள்ளது. "அவர் குமாரனாக இருந்தும், பட்டப்பாடுகளினால் கீழ்படிதலின் பொருளை அவர் நிரூபிக்கவேண்டியதாக இருந்தது..... அதற்கு பின் அவர் ஒரு பரிபூரண குமாரன் என்று நிரூபித்தபின் அவர் நித்திய இரட்சிப்பின் ஊற்றும் காரணருமானார்."

இயேசு பரிசுத்தரும், குற்றமற்றவரும், கபடில்லாதவரும்பாவிகளிடமிருந்து விலகினவருமாக இருந்தார். (எபிரெயர் 7:26) அவர் முன்னதாகவே பரிபூரணராக இருந்தால், அவர் மீண்டும் பரிபூரணராக எப்படி மாற முடியும் ? "பரிபூரணமாக்குதல்" என்ற வார்த்தை டெலியோவ் (teleioo) என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். இதற்கு முழுமைப்படுத்துதல், அதாவது சொல்லர்த்தமாக ஒரு காரியத்தை நிறைவேற்றுவது அல்லது உருவகமாக சொல்லப்போனால் குணங்களில் "முழு நிறைவான" என்ற பொருள்.

இயேசு அப்போது முழுமையற்றவராக இருந்தாரா ? ஆம், ஆனால் அவருடைய பரிபூரணம் அது வரைக்கும் நிரூபிக்கப்படவும் இல்லை. பரிசோதிக்கப்படவும் இல்லை. அநீதிகளை சகித்து கொடுமையான உபத்திரவங்களை பட்டதற்கு பின் அவர் பரிபூரணத்தில் தொடர்ந்து நீடித்திருக்க முடிந்ததா ? லூசிபெரும், ஆதாமும் பரிபூரணமான ஜீவிகளாகவே இருந்தார்கள். ஆயினும், அவர்கள் சோதிக்கப்படும்போது, அவர்கள் பரிபூரண நிலையை தொடர்ந்து தக்கவைத்து கொள்ள முடியவில்லை. இயேசு கடுமையாக சோதிக்கப்பட்டார். "ஆயினும் இயேசு ஒரு பரிபூரண மனுஷனாக, முழுநிறைவானவராக, பூரணநற்குணத்தில் நிலை நின்றார். அவருடைய கீழ்படிதலும், உத்தமமும், தேவனுக்காக அவர் கொண்டிருந்த அன்பும் அக்கினியினால் நிரூபிக்கப்பட்டது. இதினிமித்தம் உறுதிசெய்யப்பட்டது. இப்போது அவர் "பூரணப்படுத்தப்பட்டார்". இப்போது, இயேசுவுக்கு அழியாமையையும், தம்மில் தாமே ஜீவனுடையவராக இருப்பதற்கு அருள் செய்யப்பட்டது. (இது ஒரு வித்தியாசமான கருத்தாயிருந்தாலும், இதேபோல "சரீர அங்கத்தினராக" தேர்வு செய்யப்படும் அவருடைய சீஷர்களுக்கும் ஒரு சோதனையும் நிரூபனமும் நடைபெறவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. )

மேலும் - லூக்கா 10:18, ஏசாயா 14:12-15, ஆதியாகமம் 1:26-31, ரோமர் 8:16-17 வசனங்களை காண்க

***நீதிமொழிகள் 21 : 18** "நீதிமானுக்குப் பதிலாகத் துன்மார்க்கனும், செம்மையானவனுக்குப் பதிலாக துரோகியும் மீட்கும் பொருளாவார்கள்."

நீதிமானுக்கு பதிலாக துன்மார்க்கன் மீட்கும் பொருளாக முடியுமா ?

இந்த வசனம் வாசகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. ஆனால் "மீட்கும் பொருள்" என்ற வார்த்தை எபிரெய மொழியில் இன்னும் சரியாகச் சொன்னால், "ஈட்டுகிரயம்" என்பதை காட்டிலும் "பொருந்து" அல்லது "மூடுதல்" என்று பொருள்தருகிறது. (kopher) கோபர் - மூடுதல், (ga'al)கால) - மீட்கும் பொருள்)

இதற்கு ஒரு விளக்கம் - "சமுதாயத்தின் சட்டங்கள், ஜனதிரளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது பரிசுத்தவான்களுக்கு அல்ல, ஆனால் பொதுவான ஜனங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இந்த சட்டங்கள் - ஆண்டவரின் பரிசுத்தவான்களாகிய நமக்கு - ஒரு மூடுதலாக உள்ளது." (R5972)

இதே போல ஒரு பகுதியான நிந்தை இங்கு காணப்படுகிறது. நீதிமானுக்கு, துன்மார்க்கனே ஊதியம், துரோகிக்கு பதிலாக செம்மையானவன். இந்த இரண்டு வாக்கியங்களும் இணையானது. அதாவது, சரியானதற்கும், தவறானதற்கும் உள்ள வித்தியாசத்தை பெரும் பாலும் இந்த உலகம் அறியாமலிருக்கிறது.

*** மத்தேயு 27:37, மாற்கு 15:26, லூக்கா 23:38, யோவான் 19:19** சிலுவையில் தொங்கிய இயேசுவின் உண்மையான வார்த்தைகள் என்ன ?

முதல் கண்ணோட்டத்தில் இந்த மூன்று எழுத்தாளர்களும் நேரடியான சாட்சிகளாக இருந்தாலும் இந்த நான்கு வேத பகுதிகளும், ஒத்திணைந்திராததை போல தோன்றுகிறது.

"இவன் யூதருடைய இராஜாவாகிய இயேசு" (மத்தேயு ) " யூதருடைய இராஜா " (மாற்கு) " இவன் யூதருடைய இராஜா" (லூக்கா) "நசரேனாகிய இயேசு யூதருடைய இராஜா" (யோவான்)

"Encyclopedia of Bible Difficulties" என்ற புத்தகத்தில் கிலியன் அர்க்கர் (Glean Archer )இந்த வசனங்களுக்கு இடையில் சிறிதளவான ஒரு இசைவை ஏற்படுத்தினார். இவன் ஜெஹோசுவா (இயேசு) ஜெஹிடீம் (யூதர்களின்) இராஜா. (எபிரெயர் / அராமிக், மத்தேயு) இவன் யூதர்களுக்கு இராஜா (லத்தீன், மாற்கு மற்றும் லூக்கா) நசரேனாகிய இயேசு யூதர்களின் இராஜா (கிரேக்க, யோவான்)

மத்தேயு பூர்வீகமாக எபிரெய மொழியில் எழுதப்பட்டது (அல்லது அராமிக்க மொழி) இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வாழ்ந்த பாப்பாயாஸ், என்ற ஒரு கிறிஸ்தவரை பொருத்த வரையில் மத்தேயு அந்த மொழிபெயர்ப்பை பதிவு செய்திருக்க வேண்டும். மாற்கு ரோமாவுக்கும், லூக்கா ரோம அலுவலகத்திற்கு எழுதினதை போல தோன்றுகிறது. ஆகவே அவர்கள் லத்தீன் பதிப்புகளை பயன்படுத்தியிருக்கவேண்டும். சில வருடங்களுக்கு பின் யோவான் கிரேக்க நகராட்சி பரப்பில் உள்ள பத்முவில், எழுதினதால் அவர் கீரேக்க மொழியில் எழுதினார். ஆகவே உண்மையாக உணரப்படுவதை காட்டிலும், இசைவில்லாத ஒரு தோற்றத்தை அளிக்கிறது.

***மத்தேயு 12:39-40** இயேசு மத்தியான வேளையில் மரித்திருந்தாலும் இரண்டு நாட்களுக்கு பின்னர் சூரிய உதயத்தில் எழுப்பப்பட்டாரா ? அவர் பூமிக்குள் 72மணி நேரங்கள் எவ்வாறு இருந்திருக்கமுடியும் ?

"யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்." (மத்தேயு 12:40) இங்கு எத்தனை மணி நேரங்கள் என்று குறிப்பிடப்படவில்லை. இந்த கால பகுதியில் மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தால் மட்டுமே 72 மணி நேரங்களுக்கு மேல் இருப்பதற்கு வாய்ப்புண்டு. ஆயினும், இந்த காலபகுதி, இரண்டு பகலுக்கும் இரண்டு இரவுக்கும் நீண்டதாக இருக்கவேண்டும். இதற்கு இரண்டு நியாயமுள்ள சிந்தனைகள் முன் வைக்கப்படுகிறது. -

(1) மூன்றாம் நாளின் சூரிய உதயத்தின் போது அல்லது சூரிய உதயத்திற்கு சற்று பின் இயேசு உயிர்த்தெழுந்திருக்க வேண்டும். இயேசு சிலுவையில் அறைவதற்கு முன் இரவு கைது செய்யப்பட்டார். (யோவான் 18:12) அவர் சிறைக்கிடங்கில் (பூமிக்கு கீழ்) அடைக்கப்பட்டிருந்தால், அவர் முந்தய நாளிலிருந்தே "பூமியின் இருதயத்தில் இருந்திருக்கவேண்டும்.

(2) "அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி நேரமாயிருந்தது; ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று. சூரியன் இருளடைந்தது, தேவாலயத்தின் திரைச்சீலை

நடுவில் இரண்டாகக்கிழிந்தது.இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்." (லூக்கா 23:44-46) "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்தில் வந்து,.... அவன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை; இதோ, அவரை வைத்த இடம்.." (மாற்கு 16:2,6) இப்படியாக இயேசு முதல் நாளில் ஒன்பதாம் மணிநேரத்தில் மரித்தார். மூன்றாம் நாளில் முதலாம் மணி நேரத்தில் 40 மணி நேரத்திற்குபின் உயிர்த்தெழுந்தார். (அவரை அடக்கம் செய்வதற்கு காலம் சென்றிருக்கும். ஆனால் அவர் சூரிய அஸ்தமனத்திற்கு முன் அடக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (உபாகமம் 21:22,23) இயேசு ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்டார்- ஆகவே ரோமர்களின்படி, முதல் நாள் அடக்கம் செய்யப்பட்டதிலிருந்து சூரிய அஸ்தமனம் வரையில் வெள்ளி கிழமை பகல் நேரத்தில் 1-3 மணி நேரம். * முதல் இரவு காலம் - வெள்ளிகிழமை சூரிய அஸ்தமனத்திலிருந்து நடுராத்திரி வரையில் - 6 மணி நேரம். *இரண்டாவது இரவு - சனிக்கிழமை நடு இரவிலிருந்து விடியல் வரை - 6மணி நேரம் * இரண்டாவது பகல் நேரம் - சனிக்கிழமை சூரிய உதயத்திலிருந்து அஸ்தமனம் வரையில் - 12 மணி நேரம் * இரண்டாம் இரவு நேரம் சனிக்கிழமை சூரிய அஸ்தமனத்திலிருந்து நடு இரவு வரையில் - 6 மணிநேரம் மூன்றாம் இரவு, ஞாயிறு நடுஇரவிலிருந்து விடியல் வரையில் - 6 மணி நேரம் *மூன்றாம் பகல் நேரம் ஞாயிறு பகல் நேரம் 1மணி நேரத்தில் இயேசு உயிர்த்தெழுந்தார்.

இப்படியாக, வெள்ளி கிழமையின் பகுதிகளான பகல் நேரம் மற்றும் இரவு நேரம், சனிக்கிழமை முழு பகல் நேரம் மற்றும் இரவு நேரம் மற்றும் ஞாயிற்று கிழமையின் பகுதிகளான இரவு நேரம் மற்றும் பகல் நேரம் இயேசு மரித்திருந்தார். இப்படியாக இயேசு "மூன்று இரவு , மூன்று பகல் " கல்லறையில் இருந்தார் என்று ரோமர்கள் கணக்கிட்டார்கள். "

(யோனாவின் விஷயத்தில், அவர் கப்பலிருந்து வெளியே தூக்கி எறியப்படுவதற்கு முன் பல சம்பவங்கள் அந்த நாளில் நடைபெற்றதினால், அவர் மத்தியான வேளையில் தூக்கி எரியப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. மேலும் யேகோவா தேவன் யோனாவை விழுங்கிய மீன் அவரை காலையில் துவக்க நேரத்தில், கறையில் கக்கும்படிக்கு கட்டளை கொடுத்திருக்கவேண்டும். யோனா 1: 4-17,2:10)

* **லேவியராகமம் 16:10,20,22** "போக்காடாக விடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை, அதைக்கொண்டு பாவநிவிர்த்தி உண்டாக்கவும் அதைப் போக்காடாக வனாந்தரத்திலே போகவிடவும், கர்த்தருடைய சந்நிதியில் உயிரோடே நிறுத்தி;" ஒரு ஆடு எவ்வாறு புறகணிக்கப்பட்டும், ஒப்புரவாக முடியும் ? "நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது." (எபிரெயர் 9:22) அனுப்பி விடப்பட்ட போக்காட்டை தவிர, "பெரும்பாலும் அனைத்தும்" இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படும். வெளித் தோற்றமாக அந்த காளை, பிரதான ஆசாரியனாகிய ஆரோனினால் கொடுக்கப்பட்டது. ஆனால்"இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்திலே, பாவநிவாரணபலியாக இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களையும், சர்வாங்க தகனபலியாக ஒரு ஆட்டுக்கடாவையும் வாங்கக்கடவன்." (லேவியராகமம் 16:5) ஆகவே, இந்த ஆடுகள், காளையை காட்டிலும் (இயேசுவை அடையாளப்படுத்தும்) வேறு காரியத்தை அடையாளப்படுத்தும்.

காளையும், கர்த்தருடைய ஆடும் பாவ நிவாரண பலியாக செலுத்தப்பட்ட பின்," அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடக்கடவன். அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்துகொண்டு, குடியில்லாத தேசத்துக்குப் போவதாக; அவன் அந்த வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திலே போகவிடக்கடவன்." (லேவியராகமம் 16:21-22)

இந்த இரண்டு ஆடுகளுக்கான அடையாளங்கள் எசேக்கியேல்44:10-16ல் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இதில் முழு விசுவாசமுள்ள ஆசாரியர்கள், லேவியர்களோடு, வேறுப்படுத்தி காட்டப்படுகிறார்கள். லேவியர்களை பற்றி குறிப்படும் போது, "இஸ்ரவேல் வழிதப்பிப் போகையில், என்னைவிட்டுத் தூரமானவர்களும், என்னை விட்டு வழிதப்பித் தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றினவர்களுமாகிய லேவியரும் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்.ஆகிலும் அவர்கள் என் ஆலயத்தின் வாசல்களைக் காத்து, என் ஆலயத்தில் ஊழியஞ்செய்து, என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள்; அவர்கள் ஜனங்களுக்காகத் தகனபலிகளையும் மற்றப் பலிகளையும் செலுத்தி, இவர்களுக்கு ஊழியஞ்செய்கிறதற்கு இவர்கள் முன்பாக என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக் காரராயிருப்பார்கள். அவர்கள் இவர்களுடைய நரகலான விக்கிரகங்களுக்கு முன்பாக நின்று இவர்களுக்கு ஊழியஞ்செய்து, இஸ்ரவேல் வம்சத்தாரை அக்கிரமத்தில் விழப்பண்ணின படியினால், நான் என் கையை அவர்களுக்கு விரோதமாய் உயர்த்தினேன், அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.அவர்கள் எனக்கு ஆசாரியராய் ஆராதனை செய்யும்படி என் சமீபத்தில் வராமலும், மகா பரிசுத்தமான ஸ்தலத்தில் என் பரிசுத்த வஸ்துக்களில் யாதொன்றையும் கிட்டாமலும் இருக்கவேண்டும், அவர்கள் தங்கள் இலச்சையையும் தாங்கள் செய்த அருவருப்புகளையும் சுமக்கக்கடவர்கள்.ஆலயத்தின் சகல வேலைகளுக்கும் அதில் செய்யப்படவேண்டிய எல்லாவற்றிற்கும் நான் அவர்களை அதில் காவல்காக்கிறவர்களாயிருக்கக் கட்டளையிடுவேன்." (எசேக்கியேல் 44:10-14)

ஆசாரியர்களும் லேவியர்களும், மணவாட்டியையும் - 1,44,000, திரள் கூட்டத்தாரையும் அடையாளப் படுத்துகிறார்கள். செய்தி என்னவெனில், ஜனங்களை குற்றம் புரிய காரணமாக இருந்ததினால், அந்த அநீதியை திரள் கூட்டத்தார் தான் சுமக்கவேண்டும். ஆகவே இந்த அநீதிகளுக்கு, ஜனங்கள் பொறுப்பாக தேவை இல்லை. இப்படிப்பட்ட பலி இல்லாத ஈடு கிரையத்தை - தங்களுடைய சொந்த குற்றத்தை சுமப்பது - ஆதி பாவத்திற்காக ஆதாமின் மரண தீர்ப்பை நீக்கக்கூடிய ஒப்புரவாக்குதலுக்கான பாவ நிவாரண பலிக்கு இதை நாம் ஒப்பிட முடியாது.

திரள் கூட்டத்தார் அல்லது கிறிஸ்துவின் மணவாட்டியின் பலி எந்த விதத்திலும் இயேசு கிறிஸ்துவின் ஈடுபலியின் புண்ணியத்திற்கு பங்களிப்பதில்லை (காளையின் இரத்தத்தை செலுத்தும் போது காட்டப்படுகிறது. )ஏனெனில், "ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்துமுடித்தார்." (எபிரெயர் 7:27)


*** அப்போஸ்தலர் 17:31, 1தீமோ 2:3-6** மனுஷனாகிய கிறிஸ்து இயேசு இந்த உலகத்தை எவ்வாறு நியாயந்தீர்க்க முடியும் அல்லது மத்தியஸ்தராக இருக்க முடியும் ?

இயேசு உயிர்த்தெழுந்த வரையில் அவர் ஒரு மனுஷனாக இருந்தார் என்ற இரண்டு வசனங்கள் மிக உறுதியளிக்கிறது. "அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்;"(அப்போஸ்தலர் 17:31) ஆயினும் மனுஷன் என்பதற்கான கிரேக்க வார்த்தை எனர் (aner), இதற்கு ஆண் என்ற பொருள் (பெண்ணிலிருந்து வேறுப்படுத்தி காண்பிக்க) அதே நேரத்தில் எந்தரோபோஸ் (anthropose ) என்ற கிரேக்க வார்த்தை ஒரு மனுஷனை, ஆவிக்குரிய ஜீவியிலிருந்து

வேறுப்படுத்தி காண்பிக்கிறது. (மத்தேயு 9:8ல் இருப்பதுபோல)

**(4) கீழ் காண்பவையை குறித்த கடினமான வசனங்கள்**

# கிறிஸ்தவ நடை



**யோவான் 11 : 26** "நாம் என்றுமே மரிப்பதில்லை என்று ஒரு விசுவாசி எவ்வாறு நம்பமுடியும் ? இயேசு கொண்டிருந்த நோக்கத்தை ரோதர்ஹாம் மொழிபெயர்ப்பு தருகிறது. "'மீண்டுமாக" என்ற வார்த்தை கிரேக்க பிரதியில் நேரடியாக காணப்படுவதில்லை. இயேசுவை பற்றி வெளிப்படுத்தல் 2:8 ல் சொன்னதை போல இதிலும் காணப்படுகிறது. "மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது;." இயேசு மரித்தார், மீண்டும் ஜீவித்தார் என்பதே இதற்கு பொருள் "மரித்த அவர், மீண்டும் ஜீவித்தார்" என்று RVIC மொழி பெயர்ப்பிலும், "மரித்த அவர், ஜீவனுக்குள் பிரவேசித்தார்" என்ற NAS மொழிபெயர்ப்பிலும் கூறப்படுகிறது.

யோவான் 11:25,26ம் வசனங்கள், இயேசு குறிப்பிட்ட சொல்லை காட்டுகிறது. இது லாசரு மரித்த தருணமாக இருந்தது. இயேசு மார்த்தாளிடம் பேசும்போது, "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்றும் அதை தொடர்ந்து "உயிரோடிருந்தும் (மீண்டும், உயிர்த்தெழுதலில்) என்னை விசுவாசிக்கிற எவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்...." என்று கூறினார்.

***கலாத்தியர் 4:5** நாம் சுவிகாரப்புத்திரர்களா ? நாம் தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர்கள் இல்லையா ? நாம் சுவீகாரப்புத்திரர்களாகவும், ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர்களாகவும் பேசப்படலாம்.

தேவனால் அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்ட புத்திரர்களை பவுல் சுவீகாரப்புத்திரர் என்று குறிப்பிடுகிறார். இவர்கள் அபூரணமான ஆதாமின் பாவங்களின் வழியாக பிறந்தவர்கள், இவர்கள் தேவனுடைய புத்திரருக்குரிய உரிமையை பெறவில்லை. இயேசு கிறிஸ்துவின் ஈடுபலியின்மேல் உள்ள விசுவாசத்தினால், இந்த அர்ப்பணிக்கப் பட்டவர்கள், தேவனுடைய ஆவியினால் அவர்களை ஜெநிப்பித்தது முதல் அவர்கள் தேவனுடைய ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர்களாக ஏற்று கொள்ளப்படுகிறார்கள். (கலாத்தியர் 4:1-7, ரோமர் 8:14-17, 1யோவான் 3:12,13)

தேவனுடைய புத்திரர்களாக இருப்பவர்கள் தேவனுடைய ஆவியின் சாட்சியினாலும், புதிதான ஜீவனுக்குள் நடப்பதற்கு அவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதை உத்திரவாதம் அளித்திருக்கிறபடியே, பரலோக சுதந்திரத்தை பெறுவதற்கு நம்பிக்கையும் உறுதியும் பெற்றிருக்கிறார்கள். புத்திரசுவீகாரத்தை பெற்று, தேவனுடைய புத்திரர்களாக ஜெநிப்பிக்கப்பட்டோம் என்ற சிறப்பான இந்த சிலாக்கியத்தை முழுமையாக உணரக்கூடிய மனநிலை, மரண பரியந்தம் காத்துகொள்ளப்படும் விசுவாசத்தின் அடிப்படையையே சார்ந்திருக்கிறது.

ஆவியில் ஜெநிபிக்கப்பட்ட புத்திரர்கள் மரிக்கும்போது, உண்மையான ஆவிக்குரிய தேவ புத்திரர்களாக, உயிர்த்தெழுப்பப்படும் போது, அவர்களுடைய புத்திரசுவிகாரத்தை பற்றிய முழுமையான உணருதலை இறுதியில் பெறுவார்கள். (எபிரெயர் 2:10-17, வெளி 21:7,3:21)

நம்முடைய ஆவியின் ஜெநிப்பித்தலை உயிரோடு காத்துகொண்டு நம்முடைய சிந்தை மற்றும் இருதயம் சுத்திகரிக்கப்படுதலின் வழியாக நாம் வளர்ச்சி அடைவதற்கு தொடர்ந்து கிரியை செய்யலாம். (எபேசியர் 1:18)

பதிப்பாசிரியரின் குறிப்பு - நாம் இந்த "புத்திரசுவிகாரத்திற்காக" காத்திருக்கிறோம் என்று ரோமர் 8:15 மற்றும் 23ம் வசனங்கள் காட்டுகிறது. ஆனால் அதன் ஆவியை நாம் முன்னதாகவே பெற்றிருக்கிறோம். ஊயியோதீசியா(uiothesia ) என்ற கிரேக்க வார்த்தைக்கு, புத்திரராக (uios ) இருக்கக்கூடிய ஒரு "வாய்ப்பு " (thesis ) என்று பொருள்படும். இதை குறித்து கலாத்தியர் 4:1-5 வசனங்கள் விவரிக்கிறது. "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சுதந்தரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும், அவன் சிறுபிள்ளையாயிருக்குங்காலமளவும், அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை.தகப்பன் குறித்த காலம் வரைக்கும் அவன் காரியக்காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப் பட்டிருக்கிறான்.

அப்படியே நாமும் சிறு பிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்ட வர்களாயிருந்தோம். நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக,காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்...." அதாவது ஒரு பிள்ளை பொறுப்புள்ளவனாக இருக்கும் அளவுக்கு வளர்ச்சி அடைந்தபின், அவருடைய தந்தை , அவருடைய அதிகாரமுள்ள நிலையில் அவனை அமர்த்துகிறார்- நம்முடைய விஷயத்தில் உயிர்த்தெழுதலின் போது.

**✶1 பேதுரு 1:1-2 எதிராக வெளி 22:17** இது தேர்ந்தெடுத்தலா? அல்லது இலவசமான கிருபையா ?

இரண்டுமே சரியானது தான், ஆனால் அதே ஜனங்களுக்கோ,அல்லது அதே நேரத்திலோ அல்ல. இப்போதிருக்கிற சுவிசேஷ யுகத்தில் இயேசு கிறிஸ்து மற்றும் அவருடைய சபையாக அழைக்கப்பட்டு தெரிந்துகொள்ளப்பட்ட உண்மையுள்ளவர்கள் இருக்கிறார்கள். இயேசு ஞானஸ்நானம் எடுத்தபோது" இவர் நான் தெரிந்து கொண்ட, என் நேச குமாரன்..." (லூக்கா 9:35- ஆங்கிலத்தில்) என்ற ஒரு சத்தம் கேட்டது. சபையை குறித்து, "இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர் களுமாயிருக்கிறார்கள் என்றான்.." (வெளி 17:14) என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் விசுவாசமுள்ள சபைவகுப்பார், கிறிஸ்துவின் மணவாட்டி பூரணப்பட்டபின், "ஆவியும் மணவாட்டியும் வா என்பார்கள்.... " (வெளி 22:17) மேசியாவின் யுகத்தில், இந்த உலகத்திற்கு இலவசமாக கிருபை கொடுக்கப்படும்.

குறிப்பு - இலவசமான கிருபை எல்லா ஜனங்களுக்கும் கொடுக்கப்படும். ஆயினும், இப்போதும், சுவிசேஷ செய்தி முழு மனதோடு கேட்கக்கூடிய அனைவரும் அதற்கு ஏற்றவாறு செயல்பட சுயாதீனம் பெற்றிருக்கிறார்கள்.

**✶யாக்கோபு 5:15, மாற்கு 16:18** இப்போது கிறிஸ்தவர்கள் அற்புதமான சுகம் எதிர்பாக்க முடியுமா ?

இயேசுவின் முதல் வருகைக்கு முன், தேவன் தீர்க்கதரிசிகளை பயன்படுத்தி அற்புதமாக வியாதிகளை குணப்படுத்தினால். எலியா மற்றும் எலிசா மரித்த ஒருவரை உயிரோடு எழுப்பினார்கள். எலிசா சீரிய தேசத்தானாகிய ஒருவனுடைய குஷ்டரோகத்தை யோர்தான் நதியில் கழுவ சொல்லி சொஸ்தமாக்கினார். (1இராஜாக்கள் 17:17:24, 11 இராஜாக்கள் 4:17- 5:14) தேவனுடைய வல்லமையினால், இயேசுவும் அற்புதமாக சுகம் அளித்தார். அவர் மூன்று பேரை மரணத்திலிருந்து எழுப்பினார். இயேசு இந்த குணமளிக்கும் வல்லமையை பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுக்கும், மேலும் எழுபது பேர்களுக்கும் கொடுத்தார். (மத்தேயு 10:1-4, லூக்கா 10:1,17) பேதுரு மற்றும் பவுல் இருவருமே மரணத்திலிருந்து ஒருவரை எழுப்பினார்கள். (அவர்கள் அப்போஸ்தல அதிகாரத்தை பெற்றிருந்ததற்கான ஒரு பகுதியான ஆதாரம் ) நடத்தப்பட்ட அற்புதங்கள் இயேசுவின் சீஷர்களின் விசுவாசத்தை உறுதியளித்தது. மேலும் இந்த உலகத்திற்கு இராஜ்யத்தில் கிறிஸ்துவின் வேலைகளை முன் அடையாளப்படுத்தியது. தீர்க்கதரிசிகள், இயேசு மற்றும் அவருடைய சீஷர்களால் நடப்பிக்கப்பட்ட அற்புதங்கள், தங்களுடைய நன்மைகளுக்காக அல்ல, மாறாக இது பிறருடைய நன்மைக்காகவே நடத்தப்பட்டது. ஆயினும், "ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்." (லூக்கா 10:20) என்று இயேசு கூறினார்.

பேய்களை துரத்தவும், சர்பங்களின் விஷம் தங்களை தீண்டாதிருக்கவும், விசாவாசிகள் எதிர்ப்பார்க்ககூடாது. ஏனெனில், மாற்கு 16:9-20 வசனங்கள் பழங்காலத்து மூல கிரேக்க கைபிரதிகளில் காணப்படவில்லை. (கிரேக்க புதிய ஏற்பாட்டின் நவீன பதிப்புள்ள இந்த வார்த்தைகள் நிராகரிக்கப்படுகிறது)

யார் ஒருவர் (ஆவிக்குரிய விதத்தில்) வலுவற்றவர்களாக உணருகிறார்களோ, அவர் சபையில் இருக்கும் மூப்பர்களை அழைக்க வேண்டும். அவர்கள் கர்த்தருடைய நாமத்திலே எண்ணைய் பூசி, ஜெபிக்க வேண்டும். "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின்

மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்." யாக்கோபு 5:14-15) மத்திய தரைகடல் பகுதியில் உள்ள தேசங்களில், மனரீதியாகவும், உடல்ரீதியுமான நோய்களை சொஸ்தமாக்குவதற்கு வெதுவெதுப்பான ஒலிவ எண்ணையை பயன்படுத்துவது வழக்கமாக இருந்தது. வலுவற்ற ஒருவர் வியாதி குணமடைந்து படுக்கையை விட்டு எழுந்திருக்கையில் மூப்பர்களிடம், அற்புதங்கள் நடக்கவேண்டும் என்று எதிர்பார்க்கவேண்டிய அவசியமில்லை. இப்படிப்பட்ட அற்புதமான சுகத்தை நமக்காக அல்ல மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்யவேண்டும்.

சுவிசேஷ யுகத்தின் பெரும்பாலான பகுதியில், காண்பதை காட்டிலும் விசுவாசத்தின் அடிப்படையில் உண்டான வாழ்க்கையே பிதாவாகிய தேவன் மற்றும் அவருடைய குமாரனாகிய இயேசுவினால் அதிக மதிப்பு பெறுகிறது. "..." (யோவான் 20:29) என்று இயேசு தோமாவிடம் கூறினார். நம்முடைய விசுவாசம் அசைக்கமுடியாததும், இயேசுவின் பாராட்டுதலுக்குரிய விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே இருக்கவேண்டும்.

**✶மத்தேயு 5 : 42** "உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே." நாம் முழுமையாக நஷ்டமாகும் வரையில் கேட்போர் அனைவருக்கும் கொடுக்கவேண்டுமா ?

நாம் மற்றவர்களுக்கு நம்மால் முடிந்தவரையில் மனப்பூரவமாக உதவி செய்ய எப்போதும் வாஞ்சையாக இருக்கவேண்டும் என்ற ஒரு பாடம் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனையே கொடுத்தாரே , "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்." (லூக்கா 6:38) என்ற வாக்குத்தத்தத்தை நாம் இறுக பற்றிக் கொண்டால், நாம் கொடுப்பதனால், நஷ்டமடைந்து விடுவோம் என்ற கவலை நமக்கு தேவை இல்லை. நாம் கொடுப்பதைக் காட்டிலும் அதிகமாக பெற்றுக்கொள்வோம். தேவனுடைய இராஜ்யத்தை முந்தி தேடும் போது இந்த உலகத்தின் காரியங்களை பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. நம்முடைய அப்பமும், தண்ணீரும் நமக்கு கொடுக்கப்படும் என்று லூக்கா பன்னிரெண்டாம் அதிகாரம் நமக்கு விளக்கம் அளிக்கிறது. "பின்னும் அவர் தம்முடைய சீஷரை நோக்கி: இப்படியிருக்கிறபடியினால், என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் ...." ஆயினும், எதையாவது ஏடாகூடமாக நாம் கொடுக்கவேண்டும் என்று இதற்கு அர்த்தமில்லை. நாம் ஒரு தனிமனிதருக்கும், ஒரு குடும்பத்திற்கும் தேவைப்படும் தற்காலிகமான தேவைகளை வழங்க பொறுப்பேற்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். (1தீமோத்தேயு 5:8)

**✶மத்தேயு 5:44** நம்முடைய எதிராளிகளை நேசிக்க எப்படி கற்றுக்கொள்வது ?

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்."

இயேசு நமக்காக மட்டும் அல்ல நம்முடைய எதிராளிகளுக்காகவும் மரித்தார் நம்முடைய ஆண்டவர் நம்முடைய எதிராளிகளை காண்கிறபடியே நாமும் அவர்களை காண்பதற்கு முயற்சிசெய்ய வேண்டும். இதை நாம் கற்றுகொள்வதற்கு சில ஆலோசனைகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

(1)அவர்கள் செய்யக்கூடிய காரியங்களை அவர்கள் ஏன் செய்கிறார்கள் என்று முதலில் நாம் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். அவர்கள் நோக்கம் என்னவாக இருக்கிறது ? அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள் ? அவர்களுக்கு என்ன கற்று

கொடுக்கப்பட்டது? அவர்களின் பின்னணியும், அனுபவங்களும் என்ன ? அவர்கள் தாலந்துகள் என்ன? அவர்கள் எவ்வளவு மதிப்புள்ளவர்கள் ?

(2)ஒரு எதிராளி சொன்ன அல்லது செய்த எந்த காரியத்தையும் மனதில் வைக்கவேண்டாம். நடந்த நிகழ்வுகள் நடந்ததாகவே இருக்கட்டும் நாம் நமக்காக அல்ல, ஆண்டவருக்காக வாழ்கிறோம்.

(3)அவர்கள் பாவத்திலருந்து சீர்பொருந்திய பின் அவர்கள் எப்படியிருப்பார்கள் என்ற ஒரு காட்சியை காணுங்கள். அவ்வண்ணமாக அவர்கள் இருப்பதை போல அவர்களை பாருங்கள். (பாவியின் பாவத்தை பிரித்து பாருங்கள்)

(4)அவர்களிடம் பரந்த மனதோடும், தாராளமான இருதயத்தோடும் இருப்பதற்கு மனப்பூர்வமாக முடிவெடுங்கள். இதற்கான ஒரு சிறந்த எடுத்துகாட்டு - சவுலை, தாவீது பொறுமையோடு சகித்தார்.

(5)ஒரு எதிராளியை வெல்ல நம்முடைய இரக்க செயலினால் அவரை நண்பனாக மாற்றுவதே சிறந்த வழியாகும்.

(6)அவருக்கும் உங்களுக்கும் இடையில் தோன்றியிருக்கும் எந்த விதமான தவறான கருத்துக்களையும் தகர்த்து எரிவதற்கும் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்படுவதற்கும் ஜெபியுங்கள்.

***மத்தேயு 5:32** "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்.. ."வேசித்தன முகாந்திரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன் அவளை எவ்வாறு விபசாரஞ்செய்ய பண்ணுகிறவனாயிருப்பான்?

***பிரசங்கி 7:27-29** ஸ்திரீகளை காட்டிலும் புருஷர் அதிகமான நீதிமான்களா ?

பிரசங்கி 27:29 அதிகாரங்களில், சாலொமோன் கூறுவது என்னவெனில் , "ஒரு காரியத்தோடு மற்றொன்றை ஒப்பிட்டு பார்த்து இதை கண்டுபிடித்தேன். மேலும் ஒரு விளக்கம் அல்லது முடிவை கண்டுபிடிக்கும்படி இதை செய்தேன். நான் தேடியும் கண்டுபிடிக்க முடியாத அந்த ஞானம் என்னவெனில், ஆயிரம் பேருக்குள் ஒரு செம்மையான புருஷனை கண்டேன் ஆனால் அந்த ஆயிரம் பேருக்குள் ஒரு செம்மையான ஸ்திரியை நான் காணவில்லை." தேவன் மனுஷனை செம்மையானவனாக சிருஷ்டித்தார் என்று 29 ம் வசனத்தில் கூறுவதினால் மேற்கூறப்பட்ட வசனத்தில் "செம்மையான" என்ற வார்த்தையை பொருத்துவது ஏற்றதாக இருக்கும் .

ஸ்திரிகளை காட்டிலும் புருஷர்கள் செம்மையானவர்கள் என்றும், சாலோமோனின் கவர்ச்சியூட்டும் வார்த்தைகள் கூறுவதாக சிலர் தவறாக புரிந்துகொண்டிருக்கிறார். உண்மையில் அவர் சொல்லக்கூடிய காரியம் இதுவா ?

சொல்லப்படிருக்கும் தருவாயை கவனத்தில் கொள்ளலாம். சாலொமோனின் வாழ்க்கை, மற்றும் அவரைப் பற்றி சொல்லப்பட்ட மற்ற வார்த்தைகளை கவனிக்கலாம். அவரை வசப்படுத்திய ஸ்திரி, மரணத்தை விட கசப்பானவர் என்றுஅவர் கண்டுபிடித்ததாக பிரசங்கி 7:26ம் வசனத்தில் கூறுகிறார். "அவனுக்குப் பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள், அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள். சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை.." (1இராஜாக்கள் 11:3,4) சாலொமோன் புத்தியுள்ள கன்னிகையை பற்றியும் பேசியிருக்கிறார். நீதிமொழிகள் 12:4 மற்றும் 31: 10:31. ஆகவே, எல்லா ஸ்திரிகளும் அநீதியானவர்கள் அல்ல என்று அவருடைய சொந்த வார்த்தைகளினாலே எடுத்துகாட்டுகிறார்.

ஆகவே "ஆயிரம் பேருக்குள்" ஒரு செம்மையான ஸ்திரியை நான் காணவில்லை என்பது பொதுவான ஸ்திரிகளை அவர் குறிப்பிடாமல், அவர் மனம் முடித்த ஆயிரம் மனைவிகளையும், மறுமனையாட்டிகளையும் குறிப்பிடுகிறார். மேலும், ஆயிரம் பேருக்குள் ஒரு புருஷன் யார் ? ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான்

பூமியிலில்லை என்று பிரசங்கி 7:20ம் வசனத்தில் சாலோமோன் குறிப்பிடுகிறார். ஒருவேளை மேசியாவாக இருக்கக்கூடும். ஏனெனில் இவரை குறித்து காவியப்பகுதியான உன்னதப்பாட்டு 5:10 ல் "பத்தாயிரம் பேர்களில் சிறந்தவர்" என்று வர்ணிக்கிறார்.

சுருக்கமாக, சொல்லப்போனால் ஸ்திரிகளை காட்டிலும் புருஷர் செம்மையானவர்கள் என்று சாலொமோன் கூறவில்லை. ஆயினும், பதினாயிரம் பேர்களில் சிறந்தவராகிய மேசியாவை தவிர ஒருவரும் நீதிமான் இல்லை என்று அவர் கூறுகிறார்.

***யூதா 9** "மோசேயின் சரீரம் என்பதற்கு பொருள் என்ன ?

சகரியா 3:1-5 லிருந்து யூதா இந்த பாடத்தை எடுத்துள்ளார். "கர்த்தருடைய தூதன்", "சாத்தான்" (எதிராளி) மற்றும் "பிரதான ஆசாரியனாகிய யோசுவா" அழுக்கான வஸ்திரம் தரித்தவராக நின்றார். யூதா புத்தகத்தில் "பிரதான தூதனாகிய மிகாயேல்" (இயேசு கிறிஸ்து, "சாத்தான்" (குற்றம் சாட்டுகிறவன்) மற்றும் "மோசேயின் சரீரம்" (சபை) குற்றம் சுமத்துகிற ஆவியோ அல்லது அப்படிப்பட்டவர்களோடு நாம் இணையவும் கூடாது என்ற பாடத்தை நாம் பெறுகிறோம்.

***ரோமர் 8:16-28** நம்முடைய ஆவியோடு பரிசுத்த ஆவி எப்படி சாட்சி கொடுக்க முடியும் ? ரோமர் 8:16ம் வசனத்தின் பொருள் என்ன ? "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்.,. ." ?

சிந்தையில், பரிசுத்த ஆவியின் கிருபையான செயற்பாடுகளின் விளைவுகளே, பரிசுத்த ஆவி சாட்சியளித்தலாகும். விசுவாசத்தினால் தேவனிடத்தில் வரும் எந்த ஒரு பிள்ளையும், தன்னுடைய கெட்ட கிரியைகள் மற்றும் செத்த கிரியைகளிலிருந்து சீர்த்திருந்தினவர் கீழ்காணபவைகளுக்கு நேர்முக உறுதியுரை அளிக்கலாம். (எபிரெயர் 7:25)

நான் எப்போதாவது கிறிஸ்துவினால் இழுக்கப்பட்டேனா ?

நான் எப்போதாவது என்னுடைய வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்திருக்கிறேனா ?

அப்படியானால், தேவனுடைய பிள்ளை . நாம் தேவனுடைய புத்திரர்களாக மாறிவிட்டோம் என்பதற்கு பிதாவோடு நாம் ஒப்புரவாக்கப்பட்டதை, பரிசுத்த ஆவி எவ்வாறு சாட்சியிடுகிறது ?

நம்முடைய ஆவியும் பரிசுத்த ஆவியும் ஒரே மாதிரி காணப்பட்டால், நாம் தேவனுடைய புத்திரர்கள் என்பதற்கு இதுவே சாட்சி, ஒரேவிதமாக இரட்டையர்களை போல இவர்கள் ஒரே தாய் தந்தை வழி மரபினர்களாக இருப்பார். அதிகமான கனிகளை கொடுப்போமேயானால், நாம் இன்னும் இயேசு கிறிஸ்து என்னும் மெய்யான திராட்சை செடியில் நிலை பெற்றிருக்கிறோம் என்ற சாட்சி அளிப்போம். நம்முடைய ஜெபங்களின் வார்த்தைகள் பலவீனமும் அற்பமுமானது, ஆனால் தேவன் அந்த வார்த்தைகளை ஊக்குவிக்கும் ஆவியை ஏற்றுகொள்கிறார், இப்படியாக நம்முடைய ஆவி தேவனிடம் பரிந்துரைக்கிறது.

எல்லா சிட்சைகளும், தெய்வீக அதிருப்தியின் ஆதாரமா அல்லது சாட்சியா ?

நாம் அனைவரும் முற்றிலும் பூரணராக இருந்தால், அதை பரிசோதனையினால் நிரூபித்தால், நம்முடைய பரிபூரணத்திற்காகவும், அவரோடு இசைந்திருப்பதினால், தேவன் நம்மை நேசிப்பார். அப்போது சிட்சைகளும் கசப்பான அனுபவங்களும், அவருடைய அதிர்ப்தியின் அடையாளங்களாக இருக்கலாம். ஆனால் நாம் அனைவரும் அபூரணர்கள் என்றும் தெய்வீக நிலைக்கு மிக குறைவுள்ளவர்கள் என்றும் நமக்கு தெரியும். நம்முடைய புதிய இருதயங்கள், நம்முடைய புதிய சித்தம், மறுரூபமாக்கப்பட்ட நம்முடைய ஆவிகள் அல்லது இருதயங்கள் மட்டுமே தேவனால் ஏற்று கொள்ளப்படுகிறது. அதுவும் கிறிஸ்துவின் ஈடு பலியின் புண்ணியத்தினாலே. நம்முடைய ஆவி, பரிசுத்த ஆவியைப் போல மாறுவதற்கே கடுமையான அனுபவங்கள் நமக்கு அனுமதிக்கப்படுகிறது.

***1கொரி 5:5** ஒருவரை சாத்தானிடத்தில் ஒப்புகொடுத்தல், என்பதன் பொருள் என்ன ?

மிக பெரிய குற்றத்திற்காக ஒருவரை முழு சபையும் கண்டித்த பின், அதை அந்த நபர் புறக்கணித்தால், அவரை ஆயக்காரனை போலவும் புறஜாதியை போலவும் நடத்த வேண்டும் என்று இயேசு மத்தேயு 18ம் அதிகாரத்தில் கூறுகிறார். புறஜாதிகள்

ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியாது. வரிவசூலிக்கும் ஆயக்காரர், இஸ்ரயேல் தேசத்தின் துரோகிகள் என்னப்பட்டார்கள். இந்த இருவகுப்பாரும் சாத்தானுடைய தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே தள்ளப்படுவதை இது பொருள்படுத்துகிறது. 1திமோத்தேயு 1:20 ல், பவுல் நெறிதவறிபோன இரண்டு சகோதரர்களை நிந்திப்பதற்காக அல்ல கற்று கொள்வதற்கு அல்லது "திருந்துவதை" பற்றி பேசுகிறார். - இது விநோதமாக உள்ளது , ஒருவர் சாத்தானிடம் எப்படி கற்று கொள்ள முடியும் ? தேவனை தூஷிக்கக்கூடிய எந்த காரியத்தின் நிமித்தமும் சாத்தான் மகிழ்ச்சி அடைவானே, "கற்றுகொள்ளுதல்" என்பதற்கு கல்வி பயிலுதல் அல்லது ஒழுங்குப்படுத்துதல் என்று பொருள். (ஸ்டிராங்ஸ் - 3811)


ஆகவே, ஒருவரை சாத்தானிடத்தில் ஒப்புகொடுத்தலின் நோக்கம், அவரை தண்டிப்பதை காட்டிலும் திருத்துவதேயாகும். சாத்தானுடைய முயற்சிகளை சாத்தானுடைய சோதனைகளிலிருந்து தேவனுடைய பாதுகாப்பிற்கு வெளியே இருந்தால், எதிர்த்து நிற்பதற்கு கடினமாகவே இருக்கலாம். இவர்கள் அந்த பாடத்தை கற்றுகொள்ளவில்லை. 11தீமோத்தேயு 2:17,18ல் சொன்னது போல பவுல் இவர்களை அரிப்பிளவுக்கு ஒப்பிட்டு பேசுகிறார். தேவனுடைய பாதுகாப்பிற்கு வெளியே, சாத்தானுடைய உபாய தந்திரங்களில், ஒருவர் கிறிஸ்துவ ஜீவியத்தை ஜீவிப்பது கூடுமான வரையில் இயலாமல் போய்விடும். அது அவர்களின் பெறுமையை நசுக்கிவிட்டு, கூடிய சீக்கிரத்தில் தேவனிடம் திரும்புவதற்கு ஒருவர் கற்றுகொள்ள வேண்டும் என்று 1கொரிந்தியர் 5ம் அதிகாரத்தில் பவுல் விருப்பம் தெரிவிக்கிறார்.

**✶2 கொரிந்தியர் 12:2** அப்போஸ்தலனாகிய பவுல் மூன்றாம் வானம் மட்டும் எப்படி சென்றார் ? இதன் பொருள் என்ன ?

"கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருசத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார். " (11கொரிந்தியர் 12:2) என்று பவுல் எழுதினார். 2ம் வசனத்தில் எடுத்துகொள்ளப்பட்ட மனுஷன் அப்போஸ்தலனாகிய பவுல். ஆனால் அவர் மூன்றாம் வானம் மட்டும் எடுத்துகொள்ளப்பட்டாரா என்று அவருக்கு தெரியவில்லை - "சரீரத்திலோ" - அல்லது அவர் மூன்றாம் வானத்தை ஒரு தரிசனமாக கண்டாரோ - "சரீரத்திற்கு வெளியே". நாமும் அறியோம். அந்த மூன்றாம் வானம் என்ன என்பதை பவுல் 4ம் வசனத்தில் விளக்கம் அளிக்கிறார். பொதுவாக வானங்கள் மற்றும் பூமி, ஆவிக்குரிய மற்றும் அரசியல் வல்லமைகளை அடையளப்படுத்தும் படிக்கு பயன்படுத்தப்படுகிறது. முதலாம் வானமும், பூமியும், ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த உலகத்தை உள்ளடக்கியது. அது ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டது. (11பேதுரு 3:5,6) இரண்டாவது அல்லது இப்போது இருக்கிற வானங்களும், பூமியும், அதாவது இப்போதைய தீமையான உலகத்தை கட்டுப்படுத்திகொண்டிருக்கும் ஆவிக்குரிய வல்லமைகளும், அரசியல் வல்லமைகளும் கர்த்தருடைய நாளில் அழிக்கப்படும். (கலாத்தியர் 1:4, 11பேதுரு 3:7,10,12) தொடர்ந்து வரும் புதிய அல்லது மூன்றாம் வானங்களும் மற்றும் பூமியும் கிறிஸ்துவின் ஆயிரவருட இராஜ்யத்தின் வல்லமைக்கு கீழ்ப்பட்டிருக்கும். "அதில் நீதி வாசமாயிருக்கும்." (11பேதுரு 3:13) குறிப்பாக, "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது." (வெளி 21:1,2) என்பதே புதிய வானங்கள் புதிய எருசலேம், கிறிஸ்துவின் மணவாட்டி, இணைந்து, அவளுடைய தலையாகிய கிறிஸ்துவோடு புதிய அல்லது மூன்றாம் வானங்களாக இருப்பார்கள் அல்லது கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில், இந்த உலகத்திற்கு நீதியை கொண்டுவரும் ஆவிக்குரிய ஆட்சியாளர்களாக இருப்பார்கள்.

(௫) கீழ்காண்பவைகளைக் குறித்த கடினமான வசனங்கள்

# கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னம்



2 **தெசலோனிக்கேயர் 1:7-10** "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு,கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிற வர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்." இந்த நித்தியமான அழிவு மேசியாவின் ஆட்சியின் துவக்கத்தில் நடைபெறுமா ?

இயேசு திரும்பி வரும் போது, அவருடைய இரண்டாம் பிரசன்னத்தில், இந்த கீழ் படியாதவர்களுக்கு, வெளிச்சமும் சத்தியமும் வெளிப்படுத்தப்படும் போது, இந்த அழிவு துவங்கும். இந்த வெளிச்சம் அதிகரிக்க அதிகரிக்க, சத்தியம் அதிகமாக வெளிப்பட்டு, அதன் விளைவாக நம்முடைய எல்லா பாவங்களும், எங்கும் காணப்படும் தீமைகளையும் சுட்டெரிக்கப்படும். இதுவே மேசியாவின் யுகத்தில் துல்லியமாக நடைபெறும் பிரயோஜனமுள்ள வேலையாகும். மனிதர்கள் ஏற்படுத்தின அமைப்புகளிலோ, அல்லது தனிப்பட்ட ஒவ்வொரு நபர்களில் காணப்பட்டாலும் சரி, எல்லா பாவங்களையும், மனுக்குலத்தின் எல்லா அநீதிகளையும், வெளிப்படுத்தி சுட்டெறிக்கும். இது ஒரு நீண்ட கால செயலாகும். வரிசையில் முதலாவது, இக்காலத்து ஆட்சி அமைப்புகள் முற்றிலுமாக அழிக்கப்படவேண்டும் (ஏசாயா 34:1-2, எரேமியா 30:11) அப்போதிலிருந்து கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் நித்திய ஜீவனை பெற விரும்பும் ஒவ்வொரு தனிநபரின் பாவமும் வெளியரங்கமாகி வேரோடு பிடுங்கப்படும். எந்த ஒரு தனிநபரும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை மறுத்து தொடர்ந்து தங்களுடைய இருதயங்களில் அநீதியை நேசிக்கக்கூடிய நேசத்தை தக்கவைத்திருந்தால், அவர்கள் அழிக்கபடுவார்கள். சிலருக்கு முழு வாய்ப்புகளும் கொடுத்து, கிறிஸ்துவின் இராஜ்யத்தில் வழிகளில் நடப்பதற்கான ஒவ்வொரு ஊக்குவிக்கும் காரியங்களை கொடுத்து, அந்த பாதையில் முன்னேறி செல்லவில்லை என்றால் நூறு வருடங்கள் சென்ற பின் அழிக்கப்படுவார்கள். (ஏசாயா 65:20) கீழ்ப்படியாதவர் மற்ற அனைவரும் ஆயிரவருட ஆட்சியின் முடிவில் அழிக்கப்படுவார்கள். (வெளி 20:7-9) இவர்களின் பிடிவாதமான சுபாவத்தின் விளைவு அவர்களின் நித்திய அழிவு.

இந்த உலகத்தில் சகல பாவம் மற்றும் அநீதியை விரட்டுவதே கிறிஸ்துவின் பணியாகும். இது முற்றிலுமாக நிறைவேறி தீரும். 1கொரிந்தியர் 15:24-26 "அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்.எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது.பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம். " எல்லா பாவமும் கீழ்படியாமையும் அனைவரிடமிருந்து வேரோடு பிடுங்கப்படும், "கடைசி சத்துருவாகிய மரணம் அழிக்கப்பட்டது" என்று அனைவரும் களிகூறுவார்கள். இறுதியாக, நம்முடைய சிருஷ்டிகரின் ஆவியினாலும் அவருடைய கற்பனைகளின்படி வாழக்கூடிய வழியே ஜீவனுக்குரியது என்று பூமியில் உள்ள ஒவ்வொரு குடிவாழ் மக்களும் அறிந்து கொள்வார்கள். ஜீவனை கண்டடைவோர், இவ்வாறு செய்வார்கள் . ஏனெனில்

அவர்கள் இந்த சத்தியத்தை நேசிக்கவந்தவர்கள். மேலும், 11தெசலோனிக்கேயர் 2:8, செப்பனியா 3:8-9 வசனங்களை காண்க

*** 1தெசலோனிக்கேயர் 4:16-17 வெளி 1:7** நம்முடைய ஆண்டவரின் திரும்புதலின்போது, வரிசையாக நிகழும் சம்பவங்கள் என்ன ?

நம்முடைய ஆண்டவரின் திரும்புதலில், சுவிசேஷ யுகத்தின் அறுவடை வேலைகளின் துவக்கம். இந்த சம்பவங்களின் வரிசை ஒரே விதமாக செல்லும் மூன்று பாதைகளாக பிரிக்கலாம். ஒரு பாதையில் நடக்கும் சம்பவங்கள், மற்றொரு பாதையில் நடக்கும் சம்பவங்களுக்கு முன் நிபந்தனைகளாக இருக்கும். ஆட்டுக் குட்டியானவரின் திருமணம், அர்மெகதோனுக்கு சற்று முன் நடப்பதை போல அல்லது மனுக்குலத்தின் உலகம் முழுமையான இளைப்பாருதலுக்கு சற்று முன் இஸ்ரயேல் புதிய உடன்படிக்கைக்கு கீழ் வருவது போல.

(1)ஒரு ஆவிக்குரிய பாதை, இதில் பரலோக அழைப்பு, தேர்வு, சபை மகிமை அடைதல், ஆட்டுக் குட்டியானவரின் கலியாணம், திரள் கூட்டத்தாரின் உயிர்த்தெழுதல், ஆட்டுக் குட்டியானவரின் கலியாணவிருந்து.. அனைத்தும் அடங்கும்.

*"ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்." (1தெசலோனிக்கேயர் 4:16)

*பரிசுத்தவான்களின் கூட்டி சேர்த்தலின் அறுவடை வேலை நடைபெறும். (லூக்கா 12 : 36-38, வெளி 3:20, 14:15,16)

*ஏழு படிநிலைகளில் நடைபெறும் கிறிஸ்துவ மண்டலத்தின் நியாயத்தீர்ப்பு (வெளி 15:1, 18:4)

*கொந்தளிக்கும் உலகத்திற்கு, சபையினிடமிருந்து வரக்கூடிய ஒரு செய்தி நம்பிக்கை யோடிருக்கும். (அப்போஸ்தலர் 27:22-24, 11இராஜாக்கள் 2:8) பரிசுத்தவான்கள் மகிமை அடைவதற்கு முன் ஒரு மிக ப்பெரிய சுழற்காற்றின் மத்தியில் காணப்படுவார்கள் (11இராஜாக்கள் 2:11)

(2)இஸ்ரயேலின் பாதை

*மறுபடியும் கூட்டி சேர்க்கப்படுதல் மற்றும் மறுசீரமைப்பு (அப்போஸ்தலர் 1:6, 3:21) மற்றும் யாக்கோபின் உபத்திரவத்திலிருந்து இஸ்ரயேல் இறுதியாக விடுவிக்கப்படுதல். (எசேக்கியேல் 37 :1-14) மற்றும் எரேமியா 16:14 -15 வசனங்களில் உள்ள படிகளை கவனியுங்கள். )

*முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் மற்றும் இஸ்ரயேல் யூதாவோடு புதிய உடன்படிக்கை ஸ்தாபித்தல். கோகு மாகோகு இஸ்ரயேலின் மேல் படையெடுப்பு (எசேக்கியேல் 38,39)

(3)உலகத்தின் வழி - இக்காலத்து ஒழுங்குகள் ஏழு நிலைகளில் அழிக்கப்படுவதை உள்ளடக்குகிறது. -

1. நீண்ட மன அழுத்தம் (1873-1890)

2.முதலாம் உலக போர் (1914-1918)

3.மிகப்பெரிய மனஅழுத்தம் (1929-1939)

4.இரண்டாம் உலக போர் (1939-1945)

*இரண்டு போர்களின் போதும் உலகத்தில் குடியேற்ற ஆதிக்கம் இல்லாமல் போனது. (லூக்கா 21:29-31, எசேக்கியேல் 20:34, ஆமோஸ் 9:11-13)

*உலகமயமாக்கல் (Globalization ) - அதிபதி, புரட்சிகள், அரசியல் அமைதியின்மை, மற்றும் வன்முறைகளையும் ஏற்படுத்தும் (ஏசாயா 43:9, லூக்கா 12:2, ஆமோஸ் 9:13, எபிரெயர் 12:26)

(5)கிழக்குக்கு எதிராக மேற்கு போராடுதல் (1945-1989)

(6) ஆழ்ந்த மன அழுத்தம் (வருங்கால எதிர்ப்பார்ப்புகள்)

(7) அர்மெகதோன்

*பாபிலோனின் அழிவு (ஏசாயா 24:10-14, வெளி 14:19, 16:19, 18:21-23)

*இராஜ்யத்தின் துவக்க விழா மற்றும் கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சி (சங் 46:10, ஏசா 25:6-10, வெளி 16:19-20)

நம்முடைய ஆண்டவரின் அறுவடை வேலையின் இறுதி நிலையில், யாத்திராகமம் 12:29ம் வசனத்தின் அடிப்படையில் அர்மெகதோன்

துவங்கும்போது மணவாட்டி வகுப்பினர்கள் நிறைவடைந்திருப்பார்கள். கிறிஸ்துவ உலகத்தில் உள்ள பக்தியுள்ளோர் இயேசுவை நோக்கி பார்க்கும்படிக்கு இஸ்ரயேலை ஊக்குவிப்பார்கள். (உன்னதப்பாட்டு 5:8 - 6:1) திரள் கூட்டத்தார் தாமதத்தோடு மகா உபத்திரவத்திற்குள் பிரவேசிப்பார்கள். (வெளி 7:14, ஆதியாகமம் 19:19-23) அர்மெகதோனின் போது முற்பிதாக்கள் உயிர்தெழுந்து, தங்களுடைய இரட்சகரின் வசமாக இஸ்ரயேலரை திருப்புவார்கள். (மீகா 5:5) இஸ்ரயேல் தேவனுடைய ஏற்பாடுகளோடு இசைந்து வருவார்கள். அதற்குபின் படிப்படியாக உலகத்தின் சோர்வடைந்த மற்ற பகுதிகளுக்கு படிப்படியாக ஆசீர்வாதங்கள் பாயும்.

பதிப்பாசிரியரின் குறிப்பு - யோசுவா 6ல் எரிகோவில் கடைசி நாளில் நடந்த சம்பவங்களில் வரிசை - (1) அதிகாலமே அவர்கள் எழுந்தார்கள். (2) ஆசாரியர்கள் எக்காளம் ஊதினார்கள். (3) ஆர்ப்பரியுங்கள் என்ற யோசுவா கட்டளையிட்டார். (4)ஜனங்கள் ஆரவாரித்தார்கள். இது சுவிசேஷ யுகத்தின் "கடைசி நாளை" அடையாளப் படுத்துகிறது. ஆனால், 1தெசலோனிக்கேயர் 4:16-17ம் வசனங்கள், தலைகீழான ஒரு வரிசையை தருகிறது. (4) ஆரவாரம், (3) பிரதான தூதனுடைய சத்தம் (2) தேவனுடைய எக்காளம் (1) கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிர்த்தெழுவார்கள்.

பதிப்பாசிரியரின் குறிப்பு - "இப்போதோ கண்ணாடியில் பார்ப்பது போல பார்க்கிறோம், ..." (1கொரிந்தியர் 13:12) வருங்காலத்தில் உலகத்தில் நடக்கக்கூடிய சம்பவங்களை நாம் ஒவ்வொருவரும் நம்முடைய திறக்கப்பட்ட கண்களினால் தொடர்ந்து கவனித்து கொண்டிருக்கவேண்டும்.

*** வெளி 1:7, சகரியா 12:10, அப்போஸ்தலர் 1:9-11** கண்களுக்கு புலப்படாத இயேசு, அவருடைய வருகையில் எப்படி காட்சி அளிப்பார்?

உலகத்தின் மனுக்குலம் மாம்சமான கண்களினால் அல்ல தங்களுடைய "ஆவிக்குரிய உணர்வாகிய" புரிந்துகொள்ளுதலின் "கண்களின்" வழியாக மட்டுமே இயேசுவை காண்பார்கள். இந்த ஆவிக்குரிய உணர்வாகிய புரிந்துகொள்ளுதலை பற்றி தேவன் ஏசாயாவில் பொருள் கூறுகிறார். "அவர்கள்.... கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல். " (ஏசாயா 6:9) "தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது." (லூக்கா 17:20) என்று இயேசுவும் பரிசேயர்களிடம் கூறினார். இயேசு பரம் ஏறியபோது, "இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்." (அப்போஸ்தலர் 1:9-11)

அவர் திரும்பி வரும்போது, அவருடைய சீஷர்கள் மட்டுமே அவரை காண்பார்கள் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டிருந்தது. இதை இயேசு யோவான் 14:19ம் வசனத்தில் உறுதிப்படுத்துகிறார். ". .." இரவில் வரும் ஒரு திருடனை போல" இயேசு, தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்க துவங்குவார் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு 11பேதுரு 3:10ல் கூறுகிறார். மேலும், இயேசுவின் மிக பெரிய அழிவுக்குரிய வேலைகளை இந்த முழு உலகத்தின் மனுக்குலம் நிச்சயமாக "காண்பார்கள்" என்றும் விவரிக்கிறார்.

இதோடு மிக முக்கியமான ஆவிக்குரிய உணர்வாகிய புரிந்துகொள்ளுதலோடு இந்த உலகத்தின் மனுக்குலம் இயேசுவை "காண்பார்கள்". இந்த உலகத்தின் மகா உபத்திரவகாலத்தில், அவருடைய நீதியான வேலைகளின் வழியாக இயேசுவை அடையாளம் கண்டுகொள்வார்கள். ஆனால் இயேசுவின் இரண்டாம் பிரசன்னத்தோடு ஒவ்வொரு நிகழ்வுகளை விசுவாசத்தினால்

இணைத்து பார்க்கவேண்டும். விசுவாசத்தினாலே மட்டுமே சத்தியத்தில் இருக்கும் அவருடைய வார்த்தைகளை புரிந்துகொள்ளவும், அதை பற்றிகொள்ளவும் நமக்கு சாத்தியமாகும் என்று இயேசு அவருடைய சீஷர்களிடம் (நமக்கும்) கூறினார் என்று மத்தேயு 13:16ல் வாசிக்கிறோம். "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்." தேவனுடைய வார்த்தைகளை நன்கு படித்து, நம்முடைய வாழ்க்கையிலும் இந்த உலகத்தின் மனுக்குலத்திலும் அவருடைய வேலைகளை கவனித்தால் மட்டுமே நாம் தெளிவான ஆவிக்குரிய பார்வையை பெற்றுக் கொள்ள முடியும்.

பதிப்பாசிரியரின் குறிப்பு - கண்ணுக்கு புலப்பாடாதவைகளை தெளிவாக "காணலாம்". இந்த உலகத்தின் சிருஷ்டிப்பு முதல் அவருடைய புலப்படாத காரியங்கள் தெளிவாக காணப்படுகிறது. ஆக்கப்பட்ட காரியங்களை புரிந்துகொள்ளுதலின் மூலமாக உலகத்தின் சிருஷ்டிப்பின் முதல் உள்ள அனைத்தும் கண்ணுக்கு புலப்படாத காரியங்களையும் தெளிவாக காணலாம். (ரோமர் 1:20)

***மத்தேயு 24:34** இவைகள் எல்லாம் சம்பவிக்கும் முன்னே "எந்த சந்ததி ஒழிந்துபோவதில்லை" ?

துவக்கத்திலிருந்து சொன்னால், வசந்த காலத்தின் இரவும் பகலும் சம அளவு காலப்பகுதியில் வாற்கோதுமை முதலில் முதிர்ச்சி அடையும். இது இயேசு கிறிஸ்துவை அடையாளப்படுத்தும். (எடுத்துக்காட்டு - நியாயாதிபதி 7:13-14) அடுத்து ஏழு வாரங்களுக்கு பின் கோதுமை முதிர்ச்சி அடையும். இவர்கள் விசவாசமுள்ள சபை வகுப்பை அடையாளப்படுத்தும் (எடுத்துக்காட்டு மத்தேயு 3:12) சில வாரங்களுக்குபின் அத்தி பழங்கள் பழுக்கும். அத்திமரம் இஸ்ரயேலை அடையாளப்படுத்தும். (எடுத்துகாட்டு - எரேமியா 24:19)

(இந்த பகுதியில் உள்ள கேள்வி, அத்திமரம் துளிர் விடுவதை பற்றி அறிமுகப்படுத்தப்படுகிறது. (அத்திமரத்தில், அத்திக்காய்கள் முளைத்தபின் தான், மரத்தில் துளிர் விடும்) அப்படியாகவே, இஸ்ரயேல் தங்களுடைய தேசம் திரும்புவதை இன்று நாம் காண்கிறோம். "அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்தீருக்கிறார் என்று அறியுங்கள்" இப்படியிருக்க இவைகளெல்லாம் சம்பவிக்கும் முன்னே "எந்த சந்ததி" ஒழிந்துபோகாது ? இதை பற்றிய சில கருத்துக்கள் -

(1)இயேசு இந்த வார்த்தைகளை பேசும்போது ஜீவனோடு இருந்த, கிபி 70-73 (சுமார் நாற்பது வருட சந்ததி) யூதேயாவின் அழிவு வரையில். ஆனால் அப்போது யூதேயா அழிக்கப்பட்டதே தவிர, துளிர் விடவில்லை.

(2)1874, 1878 அல்லது 1914 ல் வாழ்ந்த அனைவரும் (அல்லது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள்) ஆனால் பெரும்பாலாக, அனைவரும் இப்போது மரித்திருப்பார்கள்.

(3)அல்லது 1914 ல் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட சிலர், உள்ளார்கள் என்று அறிந்த சந்ததி. ஆனால் வசனங்களிலிருந்து இந்த பொருளை பிரித்தெடுப்பது கடினமாகும்.

(4)1948ம் வருஷம் இஸ்ரயேல் மீண்டும் சுதந்திரம் பெற்றபோது வாழ்ந்த சந்ததி. ஆனால் ஒரு சமகாலத்தில் வாழ்ந்த சந்ததிக்கு 69 வருடங்கள் நீண்டதாக தோன்றுகிறது.

சங்கீதம் 22:30 ம் வசனத்தினால் ஒரு எளிமையான விளக்கம் கொடுக்கப்படுவதை போல தோன்றுகிறது. "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்.

" இந்த சந்ததி ஆபிரகாமின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியே. (ஆதியாகமம் 22:15-18) அதாவது அனைத்து புத்திரர்களும் , ஒரே தந்தையினால் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் - இரண்டாயிர வருடங்கள் தனித்தனியே வாழ்ந்து கொண்டிருந்தாலும் - இவர்கள் அனைவரும் ஒரே சந்ததி இப்படியாக, சபை நிறைவு பெறுவதற்கு முன்னதாக, இக்காரியங்கள் அனைத்தும் துவங்கும் என்று எளிமையாக இந்த வசனம் கூறுகிறது. விசவாசமுள்ளவர்களுக்கே இந்த அனைத்து அடையாளங்களும் கொடுக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப குறிப்பு - கிரேக்க மொழியில் 32 மற்றும் 33ம் வசனங்களில் முடிவில் ஒரு வார்த்தை ஜாலம்

காட்டப்பட்டுள்ளது. (எபிரெய மொழியில் இது ஒரு வழக்கமான காரியம்)Theros (வசந்தகாலம்)... thyrais (வாசல்) மூல எபிரெய மொழியில் "அறுப்பு காலத்திற்கு அருகில்" (Kalah ) ....... வாசலுக்கு அருகில் (dalah ) " மற்ற எந்த விஷயத்திலும் "வாசல் அருகே" என்பதற்கு அது (அல்லது அவர்) இருப்பதை சுட்டிக்காட்டுகிறது.

***எதிர்பார்ப்புகள் மற்றும் பாஸ்டர் ரசல்**

**கேள்வி-** (1914 - நடுவில் ) இந்த வருடம் வரும் அக்டோபர் மாதம் நிகழும் சம்பவங்களில், நீங்கள் இன்னும் மாம்சத்தில் இருக்கிறபடியால், பரம அழைப்புவகுப்பிலிருந்து ஆண்டவர் உங்களை விட்டு சென்றார் என்பதற்கான அறிகுறியாக இது இருக்கலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா ?

**பதில்** - என்னால் அப்படி சிந்திக்க இயலாது.. இப்போது கூடுதலாக, யூதர்கள் பாலஸ்தீனாவுக்கு திரும்புவார்கள் என்று நாம் எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். நாம் அதை கண்டும் இருக்கிறோம். இன்னும் அதிகமான யூதர்கள் செல்வார்கள் என்று எண்ணினோம். ஆனால் எத்தனை பேர் சென்றார்கள் என்று அறிந்து கொள்ளும் அளவுக்கு நமக்கு அறிவு இல்லை. தேவனுடைய வார்த்தைகளை நிறைவேற்றும் அளவுக்கு போதுமான எண்ணிக்கையை நாம் காண்கிறோம் . உலகத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் உள்ள வளமிக்க யூதர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அனைவரும் ஐசுவரியமுள்ள யூதர்கள் அல்ல, ஆனாலும் 18 கோடிஸ்வரர்கள் எருசலேமில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மற்றொரு காரியமும் உண்டு, 1914, அக்டோபர் மாதத்தில் எதிர்பாராமல், ஏற்பட்ட சறுக்குதல் என்ன ?

அங்கு புறஜாதிகளின் காலம் முடிவடையாது என்று நீங்கள் சிந்தித்து கொண்டிருக்கிறீர்கள் என்று நான் எண்ணுகிறேன் ?

அப்படிப்படடவையை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அவர்கள் என்ன சிந்திப்பார்கள் என்றும் எனக்கு தெரியாது. அன்பார்ந்த நண்பர்களே , இங்குள்ள கேட்போரின் கூட்டத்தின் நான்கில் மூன்று பகுதி, "புறஜாதிகளின் காலம்" என்பதற்கு என்ன பொருள் என்று துல்லியமாக அறிந்திருக்கலாம். இப்போது மீதியுள்ள கால் பகுதிக்கு, நான் இன்னும் விவரமான விளக்கத்தை கொடுக்கிறேன்....(Question Book, pages 89-99)

(6) கீழ் காண்பவைகளை குறித்த கடினமான வசனங்கள்

# உயிர்த்தெழுதல்



**யோவான் 8:56** " உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார். " எது இயேசுவின் நாள் ? ஆபிரகாம் அதை எவ்வாறு கண்டிருக்க முடியும் ?

இயேசுவின் நாளை குறித்து லூக்கா 4:18-19 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. இதை குறித்து ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின் பகுதிகளில் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. (ஏசாயா 61:1-3) இது இயேசு தம்முடைய மூன்றரை வருஷ ஊழியத்திலும் அதோடு கிறிஸ்துவின் இராஜ்யத்திலும் நிறைவேற்றக்கூடிய அற்புதமான காரியங்கள் அனைத்தும் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஆபிரகாம் தம்முடைய ஆவிக்குரிய விசுவாச கண்களினாலே இயேசுவின் நாளை கண்டிருக்கவேண்டும். எபிரெயர் 11:17-19ல் ஆபிரகாம் தன்னுடைய ஒரே பேறான குமாரனை பலிசெலுத்தும் நோக்கத்தை குறித்து பவுல் ஆச்சரியப்படும்போது, இனி வரக்கூடிய மரித்தோரின் உயிர்த்தெழுதலின் மேல் ஆபிரகாம் வைத்த விசுவாசமே (ஆவிக்குரிய உணர்ந்து கொள்ளுதல்) தன்னுடைய ஒரே பேறான குமாரனை பலி செலுத்துவதற்கு ஏவியது என்று அவர் தெளிவாக விளக்கம் அளிக்கிறார். "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்..... இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்து மெழுப்பத் தேவன் வல்ல வராயிருக் கிறாரென்றெண்ணி, தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக் கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக் கொண்டான்."

தேவனுடைய இராஜ்யம் மற்றும் அதன் விளைவாக வரும் ஆசீர்வாதங்களை குறித்து குறைந்த பட்சம், ஆபிரகாமுக்கு இரண்டு உள்நோக்கங்கள் (உணர்வுகள்) இருந்திருக்க வேண்டும். (1) அவருடைய சந்ததியின் வழியாக பூமியில் உள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்டது.(2) சாலேமின் இராஜாவும் தேவனுடைய ஆசாரியனும், மனுஷருக்கு இராஜாவாகவும் இருந்த மெல்கிசிதேக்கோடு ஆபிரகாம் நெறுங்கிய உறவை கொண்டிருக்க வேண்டும். ஒரு வேளை தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களின் முழுமையான ஆழமான அர்த்தங்களை அவர் சொல்லியிருக்க வேண்டும். ஆபிரகாமின் மிகப் பெரிய விசுவாசத்தை நாம் பழக்கப்படுத்திகொண்டு, நம்முடைய ஆசாரியரும், இராஜாவுமாகிய இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளை மிக நெருக்கமாக பின்பற்ற வேண்டும்.

*** மத்தேயு 17:3** மோசே மற்றும் எலியா மரித்துவிட்டார்கள். இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் இவர்கள் எப்படி காட்சிஅளிக்க முடியும் ?

இவர்கள் பேதுருவுக்கும், யாக்கோபுக்கும் யோவானுக்கும் ஒரு தரிசனத்தில் காட்சி அளித்தார்கள் என்று வசனங்கள் கூறுகிறது. அவர்கள் மலையிலிருந்து இறங்கி வருகையில், "அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்.." (மத்தேயு 17:9) என்று இயேசு அவர்களுக்கு கட்டளையிட்டார். இயேசுவோடு கூட இருப்பதற்கு ஒரு குறுகிய காலம் அவர்கள் மரித்தோரிலிருந்து எழுப்பப்படவில்லை. அதற்கு பதிலாக, கிறிஸ்துவின் மகிமையை குறித்து சீஷர்களுக்கு கற்பிக்க ஒரு தரிசனம் காட்டப்பட்டது. ("அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.. "மத்தேயு 17:2) என்ற காரியம் நியாயப்பிரமாணத்தினாலும் (மோசேயினால் அடையாளப்படுத்தப்படுகிறது)தீர்க்கதரிசனத்தினாலும்

(எலியாவினால் அடையாளப்படுத்தப்படுகிறது ) தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. அக்காலத்தில் இயேசு பூமிக்குரிய இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று சீஷர்கள் எதிர்பார்த்து கொண்டிருக்கையில், இயேசு தன்னுடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்காக அவர்களை ஆயத்தப்படுத்திகொண்டிருந்தார். (மத்தேயு 16:21-28) அவருடைய இராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல என்பதை சீஷர்களுக்கு காண்பிப்பதற்காகவே இந்த தரிசனம் காட்டப்பட்டது. (யோவான் 18:36) ஐசுவரியவான் , லாசரு என்ற உவமையில் இதே போல மோசே பயன்படுத்தப்பட்டதை நாம் காணலாம். "அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.. ." லூக்கா 16:31) மோசேயின் சாட்சி (நியாயபிரமாணம்) மற்றும் தீர்க்கதரிசிகளின் (எலியா) சாட்சிகளை அடிப்படையாக கொண்டு இயேசுவை மேசியாவாக யூதர்கள் ஏற்றுகொள்ளாவிட்டால் அவர்கள் மரித்தோரிலிருந்து எழும்பின இயேசு அல்லது (லாசரு மற்றும் இயேசு) வேறொருவர் வந்து கூறினாலும் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

***மத்தேயு 27:50-53** இது பூமி அதிர்ச்சியினால் உண்டான உயிர்த்தெழுதலா ?

யார் இந்த "பரிசுத்தவான்கள்"? ( மற்றவர்கள் எப்போது, பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்) "இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார். அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான் களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்த பின்பு, இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள்...." என்று நாம் வாசிக்கிறோம். சீஷர்கள் நித்திரையை விட்டு எழும்பி, கல்லறையை விட்டுப்புறப்பட்டு எருசலேமில் காணப்பட்டார்கள் என்று தெளிவாக உள்ளது.

இயேசுவின் உயிர்தெழுதலுக்கு முன்பாக யார் ஒருவரும் எழுப்பப்பட முடியாது என்ற பிரச்சனையை உணராமல் தீர்த்ததரிசிகள் தற்காலிகமாக எழுப்பப்பட்டார்கள் என்று சிலர் சிந்திக்கிறார்கள்.

*** வெளி 20:5** மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்.

" முதலாம் உயிர்த்தெழுதல், உயிர்தெழுதலே இல்லையா?

இந்த முதல் வரி அப்போஸ்தலனாகிய யோவானினால் எழுதப்படவில்லை என்று தோன்றுகிறது. பழங்காலத்து கைப்பிரதிகளில் இது காணப்படுவதில்லை. மற்றும் அராமிக் மொழியில் என்றுமே காணப்படவில்லை. இந்த சூழ்நிலையை குறுக்கிட்டு, முதல் உயிர்த்தெழுதலை, உயிர்த்தெழுதல் இல்லாதது போலாக்கியது. கான்ஸடான்டைன், இந்த பூமியின் மேல் கிறிஸ்துவின் இராஜ்யத்தை துவங்கினார் என்ற கோரிக்கையோடு, காணக்கூடிய உயிர்த்தெழுதல் இருக்காது என்ற கருத்து இசைந்து போவதற்காக இந்த வரி 4ம் நூற்றாண்டில் சேர்த்தது போல தோன்றுகிறது.

சிலர் "anastasis"என்ற வார்த்தையின் அர்த்தத்தை கட்டுபடுத்தி இந்த வரியை விளக்க முயற்சிக்கிறார்கள். தேவனுக்குமுன் முழுமையாக நிற்பது முழுமையான நிறைவு. ஆனால் வார்த்தைகள் உண்மையாக இருந்தால், அவைகளை விவரிக்க வேண்டிய அவசியமில்லையே.

ஆதாரம் - ஒரு வேதபாரகனின் கண் 4ம் வசனத்தில் உள்ள "ஆயிர வருடங்கள்" களிலிருந்து, 5ம் வசனத்தில் உள்ள அதே வார்த்தைக்கு தப்பிப் போனது என்று பொதுவாக எண்ணப்படுகிறது. ஆனால் இது ரூர எதிரிடையான ஆதாரம். கிபி 300 ம் வருடம் ஒரு கைப்பிரதியில் (Victorinus petau) இந்த வரி தவிர்க்கப்பட்டதே இதற்கான ஒரே ஆதாரம் (ஆனால் ஒரு நூற்றாண்டிற்குபின் ஜெரோம் என்பவர் இந்த வரியை சேர்த்ததாக தானே கூறினார்) எழுபது கிரேக்க வெளிப்படுத்தலின் கைப்பிரதிகள் (4ம் நூற்றாண்டில் தலைமையான கைபிரதி) இந்த வரியை சேர்க்கவில்லை (மொத்தம் 182) 5ம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐந்து நிலைகளில் காணப்பட்டதாகவும், ஆனால் மற்ற இரண்டு கைபிரதிகள் மட்டுமே ஆதரவு தெரிவித்ததாக அலக்சான்றியன் கூறுகறிது. துரதிஷ்டமாக ஒன்பதாம் நூண்றாண்டுக்கு முன்பாக எந்த கைபிரதியும் நம்மிடம்

இல்லை. 6வது நூற்றாண்டில் காணப்பட்ட Accumenius பகுதியை 13வது நூற்றாண்டு பிரதிகள் பாதுகாத்ததாக தோன்றுகிறது. (இதன் விளக்கவுரை இதை சேர்த்துக்கொண்டாலும்) இந்த பகுதியை சேர்த்து கொண்ட கைப் பிரதிகள் எண்ணிக்கை 13வது நூற்றாண்டிற்கு பிறகு தான் அதிகரித்துள்ளது. சில நூற்றாண்டுகளுக்கு பிறகு தான் இந்த பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. எனவே இது நம்பத்தகுந்ததல்ல.

**★சங்கீதம் 88:5 மரித்தவர்களில் ஒருவனைப்போல் நெகிழப்பட்டிருக்கிறேன்; நீர் இனி ஒருபோதும் நினையாதபடி, உமது கையால் அறுப்புண்டுபோய்ப் பிரேதக்குழிகளிலே கிடக்கிறவர்களைப் போலானேன்.** மற்றும் **ஏசாயா26:14,43:17** என்றுமே உயிர்த் தெழுப்பப்படாதவர் யாராவது உண்டா ?

88ம் சங்கீதம் ஆலயத்தின் ஞானமுள்ள வாத்திய தலைவனாகிய எஸ்ராகியனாகிய ஏமானின் போதக சங்கீதமாகும் "என் இரட்சிப்பின் தேவனாகிய கர்த்தாவே, இரவும் பகலும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்." என்று இந்த சங்கீதம் துவங்குகிறது. இந்த பாடகன் இரட்சிப்பின் நம்பிக்கையை பெற்ற ஒரு நேர்மையான மனுஷன். "நான் குழியில் இறங்குகிறவர்களோடு எண்ணப்பட்டு, பெலனற்ற மனுஷனைப் போலானேன்.மரித்தவர்களில் ஒருவனைப்போல் நெகிழப்பட்டிருக்கிறேன்; நீர் இனி ஒருபோதும் நினையாதபடி, உமது கையால் அறுப்புண்டு போய்ப் பிரேதக்குழிகளிலே கிடக்கிறவர்களைப் போலானேன். "இறுதியாக, இரண்டாம் மரணத்திற்கு செல்லக்கூடியவர்கள் பற்றி அவர், "ஒருவனை போல" என்று குறிப்பிடுகிறார். அவருக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கை உண்டு. "நானோ கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; காலையிலே என் விண்ணப்பம் உமக்கு முன்பாக வரும்." (வசனம் 13)


ஏசாயா 26:14ல்"என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்." (26:9)என்பதே சூழ்நிலையாகும். ஆயிரவருட ஆட்சியே, நியாயத்தீர்ப்பின் நாளாகும். (வெளி 20:4)ஆயிரவருட ஆட்சியில் மனந்திரும்பாத துன்மார்க்கர் அழிக்கப்படுவார்கள் - இரண்டாம் மரணம் - என்று ஏசாயா 26:10,11 ம் வசனம் காட்டுகிறது. "எங்கள் தேவனாகிய கர்த்தாவே, உம்மையல்லாமல் வேறே ஆண்டவன்மார் எங்களை ஆண்டார்கள்; இனி உம்மைமாத்திரம் சார்ந்து உம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபப் படுத்துவோம். அவர்கள் செத்தவர்கள், ஜீவிக்கமாட்டார்கள்; மாண்டராட்சதர் திரும்ப எழுந்திரார்கள்; நீர் அவர்களை விசாரித்துச் சங்கரித்து, அவர்கள் பேரையும் அழியப்பண்ணினீர். " (26:13-14)ஆயிர வருடத்திற்கு பின் சாத்தானுடையவர்கள் "இரண்டாம் மரணத்தை" அடையவர்கள் என்று இந்த வசனங்கள் உறுதியளிக்கிறது.

"இரதங்களையும் குதிரைகளையும் இராணுவங்களையும் பராக்கிரமசாலிகளையும் புறப்படப்பண்ணி, அவைகள் எழுந்திராதபடிக்கு ஒருமித்து விழுந்து கிடக்கவும், ஒரு திரி அணைகிறதுபோல் அவைகள் அணைந்துபோகவும்பண்ணுகிற கர்த்தர் சொல்லுகிறதாவது: .." என்று ஏசாயா 43:17 கூறுகிறது. தேவனுடைய ஜனங்கள் செங்கடலை கடந்தபின் பார்வோனும் அவனுடைய இரதங்களும் சேனைகளும், கடலில் மூழ்கினதை பற்றி இது விவரிக்கிறது. 39 வருடங்களுக்குப்பின் இந்த வசனம் முடிவுக்கு வந்தது, அதற்குபின் அது ஒரு போதும் இஸ்ரயேலுக்கு முன் வரவில்லை. (யாத் 14:13,28) செங்கடலை கடப்பது, ஆயிரவருடத்தின் முடிவை அடையாளப்படுத்துகிறது. அப்போது சாத்தானும் அவன் சேனைகளும் அவனை பின்பற்றின மனிதர்களும் "கொஞ்ச காலம் " கட்டவிழ்க்கப்பட்டு இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். (வெளி 20:3,7:10) (43 :1-14, "கடைசி நாள்" பற்றி தீர்க்கதரிசனம் உரைக்கிறது. அதே நேரத்தில் 43:13-21 ஆயிர வருடத்தை தொடர்ந்து வருவதை கூறுகிறது. ) சாம்ராஜ்யங்கள், மிக பெரிய தொழில்கள், நிறுவனங்கள் அனைத்தும் அர்மெகதோனுக்குப்பின் எப்போதுமே எழும்புவதில்லை என்பதற்கு ஏசாயாவின் இரண்டு வசனங்களையும் சிலர் பொருத்துகிறார்கள்.

ஆசிரியர் குறிப்பு - மூல பாவத்திற்கு இயேசுவின் ஈடுபலியே பாவ நிவாரன பலியாகும். கிறிஸ்துவின் இரத்தத்தினால் ஒரு மனுஷன் முதலாம் மரணத்திலிருந்து அதாவது ஆதாமின் மரணத்திலிருந்து விடுவிக்கப்படும் வரையில், அவர் "இரண்டாம் மரணத்திற்கு" பாத்திரவான் அல்ல.

(7) கீழ் காண்பவைகளை குறித்த கடினமான வசனங்கள்

# இராஜ்யங்கள்



**யோபு 19:26** யோபு தன்னுடைய மாம்சத்தில் தேவனை காணமுடியும் என்று எப்படி நம்பினார் ?

"The Messiah" என்ற Handel's பிரசங்கத்தில் யோபு 19:25-26 வசனங்களை உயிர்த்தெழுதலின் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை ஊக்குவிக்கும் வசனங்களை மிக அழகாக நினைவுப்படுத்தியிருக்கிறார். "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்." யாத்திராகமம் 33:20 ல் "நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது என்றார்." என்று சொல்லியிருக்க, யோபு தன்னுடைய உயிர்த்தெழுதலின், மாம்ச சரீரத்தில் அவர் தேவனை எவ்வாறு தரிசிக்கமுடியும் ?

Strongs அகராதியை பொருத்தவரையில் "காண்பேன்" என்று 26ம் வசனத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தைக்கு (chazah) மனதால் உணர்ந்து கொள்ளுதல் என்று பொருள். இங்கு குறிப்பிடப்படும் "காண்பேன்" என்ற வார்த்தைக்கு இதுவே பொருளாகும். அதற்குபின் யோபின் புத்தகத்தில், சூழற்காற்றிலிருந்து தேவன் பேசிய பின், தாழ்மையும், சீர்பொருந்திய யோபு, "யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்.." (யோபு 42:5) என்று கூறினார். "காண்பேன்" என்பதற்கு வேறொரு எபிரெய வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டாலும், உருவகமாக காண்பதையும் இது பொருள்படுத்துகிறது. ஒருவர் இறுதியாக ஒரு காரியத்தை புரிந்து கொண்டபின் "ஆஹா! இப்போது எனக்கு தெரிகிறது" என்று கூறுவது போல, தன்னுடைய புரிந்து கொள்ளுதலின் கண்கள், உட்பார்வையின் திறன் அதிகரித்தல் மற்றும் தேவனுடைய ஞானம் மற்றும் வல்லமையை தான் கண்டுகொண்டதை பற்றி யோபு இந்த வசனங்களில் குறிப்பிடுகிறார். நாமும் கூட தேவனை காண்பதற்கு தேடலாம் - சபையின் விவகாரங்களை மேற்கொள்ளவும் அதற்கான முன்னேற்பாடுகளிலும், இந்த பூமியின்மேல் பரிபூரணமான இராஜ்யம் படிப்படியாக ஸ்தாபிக்கக்கூடிய உலகத்தில் முன்னேறக்கூடிய நிகழ்வுகளில் செயல்படக்கூடிய தேவனுடைய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமையை நாம் "மனதார உணர்ந்துகொள்ளலாம்.

**✶ சங்கீதம் 2 : 8** - ஒரு புற இனத்தார் போல் இயேசுவுக்கு இந்த சுதந்திரங்கள் தேவைப்படும் காரணம் என்ன ?

இது இனங்கள் /ஜாதிகள் பற்றியோ அல்ல . ஆனால் கிறிஸ்து இவர்களை சுதந்தரிக்க விரும்பும் படிக்கு அவர்களுக்கு என்ன நன்மை செய்யமுடியும் என்பதை பற்றியது. "கர்த்தர் என்னை நோக்கி - "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" என்று இங்கு சூழ்நிலை கொடுக்கப்படுகிறது. இது அப்போஸ்தலர் 13:32-33ம் வசனம் இயேசுவின் உயிர்த்தெழுதலோடு தொடர்புப் படுத்துகிறது. ஜாதிகளை பெற்று கொண்டபின், "..... .ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன்.அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப் படுவார்கள். .." (வெளி 2:26,27)

இப்போது கிறிஸ்துவ அழைப்பில் ஞானிகளை வெட்கப்படுத்தும்படியாக, தேவன் உலகத்திலே பையித்தியமானவர்களை தெரிந்துகொண்டார். (1கொரிந்தியர் 1:26-29) கிறிஸ்துவும் அவருடைய சபையும் எதிர்ப்புகளை தகர்த்து இந்த உலகத்தை பரிசுத்தமான வழியில் நடத்தும் போது அவர்களுக்குள் பூமியில் உள்ள அனைத்து தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும். (ஆதியாகமம் 22:18) இவ்வாறு கிறிஸ்து தம்முடைய மகிமையற்ற சுதந்திரத்தை - ஜாதிகளை - மகிமைப்படுத்துவார். (ஏசாயா 60:13)

**✶ மத்தேயு 6 : 10,13** "உம்முடைய இராஜ்யம் வருக... இராஜ்யம் உம்முடையது." தேவனுடைய இராஜ்யம் இனி வரக்கூடியதா ? அல்லது இப்போது நடந்து கொண்டிருக்கிறதா ?

"ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்,

என்பதே..." என்ற வரிகள் மூன்று சிறந்த கைபிரதிகளில் காணப்படவில்லை. லூக்கா 11:4லிலும் காணப்படுகிறதில்லை. யாரோ ஒருவர் 1நாளாகமம்29:11, "கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும், மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடைவைகள்.." என்ற வசனத்தை இங்கு சேர்த்திருக்கவேண்டும். இப்படியாக, மத்தேயு எழுதினதில் எந்த முரண்பாடுகளும் இல்லை. ஆவியால் தூண்டப்படாத, வேதபாரகரால் பின்னர் சேர்க்கப்பட்ட பகுதியில் தான் முரண்பாடு உள்ளது.

**✶ மத்தேயு 8 : 11** கேள்வி - பூமியில் உள்ள ஜனங்கள் பரலோக இராஜ்யத்தில் ஆபிரகாமோடு எப்படி பந்தியிருக்க முடியும் ?

நூற்றுக்கு அதிபதி ஒருவர் மிக பெரிய விசுவாசத்தை வெளிப்படுத்திய போது (8:5-20) இயேசு ஆச்சரியப்பட்டு, இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் **இஸ்ரயேலுக்குள்** நாம் காணவில்லை என்று அவர் கூறினார். இவர் ஒரு புறஜாதியாக இருந்தார் - ஒரு ரோமன், அதற்குபின் "அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." என்று இயேசு கூறினார்.

இராஜ்யத்தில் (பரலோகம்) இருக்கக்கூடிய சிலர், அதிலிருந்து **வெளியேற்றப்படுவார்கள்** என்றும், வெளியே இருக்கக்கூடிய சிலர் உள்ளே வருவார்கள் என்றும் இயேசு கூறுகிறார். பரலோக இராஜ்யம் என்பது தேவனுடைய இராஜ்யமாகும். அதில் இராஜ்யத்தின் பல்வேறு உலகம், யுகம் மற்றும் காலங்களில் பொருந்தக்கூடிய நிபந்தனைகளையும் கட்டளைகளையும் ஏற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய அல்லது பூமிக்குரிய அதன் பிரஜைகளை தேவன் இராஜாவாக பரலோகத்திலிருந்து ஆட்சி செய்வார்.

"இராஜ்யத்தின் புத்திரர்கள் ", ஆபிரகாமின் மாம்ச சந்ததியும், அவருடைய வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தின் சந்ததியில் அழைக்கப்பட்டவர்கள் (ஆதியாகமம் 22:16-18), ஆயினும் இவர்கள் கலககாரர்களும், அவிசுவாசிகளுமாக இருந்தார்கள். அவர்கள் 32 வருடங்கள் இயேசுவை கவனமாக பார்த்து அவரை மேசியா அல்ல என்று நிராகரித்தார்கள். அவர்களுடைய தலைவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். இவர்கள் இராஜ்யத்தில் அவர்களுடைய நிலையை தொலைத்தார்கள். இறுதியாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து துரத்தப்பட்டார்கள், எருசலேமும் ஆலயமும் கிபி 70ல் அழிக்கப்பட்டது. இஸ்ரயேலர் சிதறடிக்கப்பட துவங்கினார்கள். வெளியேற்றப்பட்ட "புத்திரர்களுக்கு" பதிலாக இராஜ்யத்தில் பிரவேசிக்கக்கூடிய "பலர்" புறஜாதி விசுவாசிகள் (இஸ்ரயேலின் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் இவர்கள் இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தின் வழியாக இராஜ்யத்தின் பிரஜைகளாக உள்ளே பிரவேசித்து, ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களை பற்றிகொண்டு, (ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கும் கூறப்பட்ட ) ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக மாறுவார்கள். மீண்டுமாக, இதே கருத்து ரோமர் 11ம் அதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது இங்கு பவுல் ஒலிவ மரத்தை (ஆபிரகாமின் வாக்குத்தத்தம் மற்றும் அதன் பலன்கள் )ஒரு மாதிரியாக எடுத்துகாட்டுகிறார். ஒலிவமரத்தின் கிளைகள் முறிக்கப்பட்டு (இஸ்ரயேல்) காட்டு ஒலிவமர கிளைகளினால் (புறஜாதிகள் ) ஒட்டவைக்கப்படுவதை கூறுகிறார்.

மத்தேயு 8:11(R1015-2-4) வின் முழுமையாக, இன்று விரிவாக, ஒரு இறுதியான காட்சியை நாம் காணும் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட புறஜாதிகள் தங்களுடைய தீர்மானிக்கப்பட்ட கடைசி பரலோக பரிசை ஆயிரவருட இராஜ்யத்தில் பெற்று கொள்வார்கள் அதற்குபின் "ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபோடு அந்த பரலோக இராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள்" இயேசு சிலுவையில் மரிக்கும் வரையில் பரலோக பரிசுக்கான வாய்ப்பு இன்னும் கொடுக்கப்படாததினால் (11திமோத்தேயு 1:10, எபிரெயர் 9:8) , உயிர்த்தெழும் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு (மற்றும் அனைத்து முற்பிதாக்களும்) ஆயிர வருட ஆட்சியில் பூமிக்குரிய ஆட்சியாளர்களாக இருப்பார்கள். (சங்கீதம் 45:16, எபிரெயர் 11:39,40) ஆனால் அனைவரும் ஒருமித்து அமர்ந்திருப்பதுபோல கருதப்படும். ஏனெனில் அனைவரும் (இராஜ்யத்தின் பரலோகம் மற்றம் பூமியின் பிரதிநிதிகளாக இருப்பார்கள்) ஆண்டவரின் மகிழ்ச்சியில், ஜாதிகளை ஆசீர்வதிக்கக்கூடிய வாக்களிக்கப்பட்ட வேலைகளிலும் பங்குதாரர்களாக இருப்பார்கள். மேலும் விவரங்களுக்கு லூக்கா 13:28-30 வசனங்களையும் காண்க .

பதிப்பாசிரியரின் குறிப்பு - அல்லது ஆபிரகாம், ஈசாக்கு மற்றம் யாக்கோபு எழுப்பப்பட்டு, பூமியில் சிறப்பு மிக்கவர்களாக காணப்படும்போது பல புறஜாதிகள் அதிக பாத்திரவான்களாக காணப்படுவார்கள். ஆனால் இஸ்ரயேலின் மத தலைவர்கள் மிகவும்

தாழ்மைப்படுவார்கள். இது பரலோகத்தில் உள்ள இர்ாஜ்யம் அல்ல இது பரலோகத்தின் இராஜ்யம் (லூக்கா 13-28-20ல் தேவனுடைய இராஜ்யம்)

**✶ மத்தேயு 25:31** இதை தொடர்ந்து வரும், வெள்ளாடு செம்மறியாடு உவமையில் - நித்தியமான தீர்ப்பு இக்காலத்து அனுபவங்களின் அடிப்படையில் சார்ந்துள்ளதா?

இக்காலத்து அனுபவங்களின் அடிப்படையில் சபை வகுப்பாருக்கு நித்தியதீர்ப்பு கொடுக்கப்படுவதில்லை. ஏனெனில், இப்போது நாம் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய விஷயத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையை சார்ந்திருக்கும். இந்த கோணத்தில், சுவிசேஷ யுகத்தில், நம்முடைய சகோதரர்களோடு விசுவாசத்தை பொருத்தவரையில், இந்த உவமையில் உள்ள பாடத்தை நம்முடைய இருதயத்திற்குள் எடுத்துக் கொள்ளலாம்.

ஆயினும், இராஜ்யத்தில்,"அவருக்கு முன்பாக" கூட்டி சேர்க்கப்பட்ட உலகத்தின் மனுக்குலத்திற்குண்டான சோதனையை பற்றி இந்த உவமை விவரிக்கிறது. ஆயிரவருட ஆட்சியில் அவர்களின் செயல்களுக்கு தக்க நித்தியமான நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படும். அப்போது இருதயம் கடினமுள்ள வெள்ளாட்டு வகுப்பார், "அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" (41) அதே நேரத்தில் தங்களுடைய சக ஜனங்களிடம் தெய்வீக அன்பை வெளிப்படுத்தக் கூடிய நீதியுள்ளவர்கள் "நித்திய ஜீவனை"சுதந்தரித்து கொள்வார்கள்.

**✶1 கொரிந்தியர் 15 : 23-28** – இந்த வசனங்களில் ஆயிரவருட வேலைகள் தவிர்க்கப்பட்ட காரணம் என்ன ?

எந்த வசனங்களிலும் காணப்படாத அளவுக்கு இந்த வசனங்களில் தெய்வீக திட்டம் மிக சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. வார்த்தைகளில் சிக்கனத்தை பாருங்கள், அப்போஸ்தலனாகிய பவுல் மனுக்குலத்தின் முழு அனுபவத்தையும், அதாவது ஆதாமின் மரணத்திலிருந்து பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து (முழு மனுக்குலத்தினாலும் சுதந்தரிக்கப்பட்ட தண்டனை) ஆதாமின் மரண நிலையிலிருந்து முழுமையாக நீக்கப்படும் வரையில் விவரித்திருக்கிறார். இப்போது சீர்பொருந்தப்பட்டு, தகப்பனிடம் திரும்பிய உயிர்த்தெழுந்த ஒரு உலகம், "நன்மை மற்றும் தீமையின் அறிவின்" முழு அனுபவம் பெற்றிருப்பார்கள். அவருடைய அற்புதமான ஞானம் மற்றும் திட்டத்திற்காக, தேவனை துதிப்போம்.

"கிறிஸ்துவுக்குள் அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்ற சொற்றொடரோடு 22ம் வசனம் முடிவடைகிறது. ஒருவர் ஜீவனை பெறுவதற்காக கிறிஸ்துவிடம் வரக்கூடிய ஒரு செயல்முறையை இது விவரிக்கிறது. ஆனால் இது அனைவருக்கும் ஒரே நேரத்தில் நடைபெறுமா ? இதற்கு ஒரு "வரிசை" இருப்பதாக 23ம் வசனம் கூறுகிறது. இங்கு குறிப்பிடப்படும் "முதற்பலன்கள்" இயேசுவையும் அவருடைய சபையின் சரீரஅங்கத்தினர்களாகிய கிறிஸ்துவை மொத்தமாக கூறப்படுகிறது. "எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்ற காரியமே வரிசையில் முதலில் நடக்கக்கூடிய நிகழ்வாகும். இதை பிரித்து பார்க்கும்போது, அதற்குபின் வரும் கனிகளும், அதில் கிறிஸ்துவின் பகுதியாக இராத மீதியுள்ள மனுக்குலத்தின் பொதுவான உலகத்து ஜனங்களும் அடங்குவார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். "பின்பு அவர் வருகையில் அவருடைய வர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்று இவர்களை பற்றி அப்போஸ்தலர் கூடுதலாக கூறுகிறார். மூல மொழியில் பார்க்கும்போது, இது பரோஷியா அல்லது பிரசன்னத்தில் அல்லது பிரசன்னத்திற்குள் நடைபெறும் என்ற சிந்தை காணப்படுகிறது. கிறிஸ்துவின் "பிரசன்னம்" அவருடைய வருகையின் தருணத்தை பற்றி மட்டும் அல்லாமல், ஆயிரவருட ஆட்சி முழுவதும் நடைபெறக்கூடியதாக உள்ளது.

"அப்போது முடிவு உண்டாகும். " எதனுடைய முடிவு ? விழுந்துபோன மனுஷனுக்கும் யெகோவா தேவனுக்கும் இடையில் மத்தியஸ்த வேலையின் முடிவாகும். இராஜ்யத்தின் வேலை நிறைவடையும் போது, மத்தியஸ்தராகிய - கிறிஸ்து மற்றும் சபை - அப்பொறுப்பிலிருந்து விடுப்படுவார்கள். அதற்குபின் மனித குடும்பத்தின் ஒவ்வொரு தனிநபருக்கும், தங்களுடைய பரலோக பிதாவுக்கும் நேரடியான ஒரு தொடர்பு மறுபடியும் ஸ்தாபிக்கப்படும். இந்த ஐக்கியம் விழுதலுக்கு முன் ஆதாமுக்கும் யெகோவா தேவனுக்கும் இருந்த உறவை போலிருக்கும்.

25-28, ஆகிய இந்த நான்கு வசனங்களும், இது வரையில் நடந்தவைகளை விவரிக்கிறது. தங்களுடைய பரிபூரணமான தேவனுக்குமுன் சாகாமல் நிற்பதற்கு ஆயிர வருட ஆட்சியில் இந்த மனுக்குலத்தை எவ்வாறு ஆயத்தம் செய்வார் என்பதை இவைகள் விவரிக்கிறது. இவர்கள் தங்களுடைய சொந்த நீதியில் நின்று யெகோவா

தேவனோடு ஒரு புதிய உடன்படிக்கைக்குள் முழுமையான ஒப்பந்தத்திற்குள் பிரவேசிப்பார்கள். அவருடைய பிரமாணங்கள் மற்றும் கட்டளைகளை இவர்கள் முழுமையாக காத்துகொள்ள திறனுள்ளவர்களாக இருப்பார்கள். இவர்கள் ஞானத்தை உணர்ந்து, தங்களுடைய தேவனுக்காக கொண்டிருக்கும் அன்பினால் இவைகளை அவர்கள் கடைபிடிப்பார்கள். சுருக்கமாக சொல்லப்போனால் ஆயிரவருட ஆட்சியின் வேலைகள் வெகு சில வசனங்களில், மிக வல்லமையுள்ளதாக இந்த செய்தி காண்பிக்கப்படுகிறது. மேலும், அப்போஸ்தலர் 3:19-23 வசனங்களை காண்க.

✶ **1கொரிந்தியர் 15:29** "மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?." நாம் மரித்தோருக்காக எவ்வாறு ஞானஸ்நானம் பெற முடியும்?

கிறிஸ்துவுக்குள் மற்றும் அவருடைய மரணத்திற்குள் நம்முடைய ஞானஸ்நானம் மற்றும் திரைக்கு அப்பால் கடந்து இயேசுவோடு ஊழியம் செய்து, மரித்த உலகத்தின் மனுக்குலத்தை எழுப்பி, ஆயிரவருட ஆட்சியில் அவர்களை ஆசீர்வதிப்பதற்கு நம்மை தகுதியுள்ள வர்களாக மாற்றுவதற்கு,ஏற்ற வாழ்க்கையின் அனுபவங்கள் பெற்று தேர்ச்சி பெறுவதையே இங்கு பவுல் ஞானஸ்நானம் என்று கூறுகிறார். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? " (ரோமர் 6:3) இதே ஞானஸ்நானத்தை குறித்து மத்தேயு20-24ல் இயேசுவும் குறிப்பிடுகிறார். "மற்றப் பத்துப்பேரும் அதைக்கேட்டு, அந்த இரண்டு சகோதரர்பேரிலும் எரிச்சலானார்கள்.."

1கொரிந்தியர் 15:29ம் வசனத்தின் அடிப்படையில் "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாக" (1தெசலோனிக்கேயர் 4:16) இருக்கக்கூடிய சபையின் மற்ற அங்கத்தினர்களுக்காக நாம் சகிக்கக்கூடிய அனுபவங்கள் மற்றும் சோதனைகளையும் பவுல் ஒருவேளை சிந்தையில் கொண்டிருக்கலாம். பவுலின் உழைப்பு மற்றும் நித்தம் அவர் செய்த பணிகள், இன்னும் மரணதருவாயில் வரை அவர் செய்த அனைத்தும், நேரடியாக அவர் ஊழியம் செய்த சகோதரர்களுக்காக இருந்தது. ஆகவே "நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்?" ? என்று 30 வசனம் வெளிப்படுகிறது. (அவரை போல சகோதரர்களை சேவித்தல்)

✶ **1கொரிந்தியர் 15:50-54** இங்கு பவுல் உண்மையில் என்ன கூறுகிறார் ?

கிறிஸ்துவின் திரும்புதலுக்கு முன் மரித்தவர்கள், அவருடைய வருகை வரையில் மரண நித்திரையில் இருப்பார்கள் என்றும், கிறிஸ்துவின் வருகைக்கு பின் மரித்தவர்கள், நீண்ட காலம் மரண நித்திரையில் தரித்திராதபடிக்கு "ஒரு நொடிபொழுதில்" மறுரூபமாக்கப்படுவார்கள் என்று பவுல் இந்த பகுதியில் குறிப்பிடுகிறார் என்று சகோதரர்கள் சரியாக புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆயினும், பவுல் இந்த காரியத்தை குறிப்பிடும் விதமானது, வேறுப்பட்ட கைப்பிரதிகளில், வெவ்வேறு விதமாக பிரதிபலிக்கிறது. இதற்கான ஆதாரத்தை RVIC மொழிபெயர்ப்பின் கீழ் குறிப்பு கொடுக்கிறது. "நாம் அனைவரும் நித்திரை அடைவோம், ஆனாலும் ஒரு கண் சிமிட்டும் நேரத்தில் நொடியில் மறுரூபம் ஆக்கப்பட மாட்டோம்." மற்றொரு வார்த்தைகளில் சொல்லபோனால், சிலர் ஒரு நொடி பொழுதில் மாறிடுவார்கள். (பிரசன்னத்தில் வாழ்பவர்கள்) சிலர் மாற மாட்டார்கள் (பிரசன்னத்திற்கு முன் மரித்தவர்கள் இவர்கள் கிறிஸ்துவின் திரும்புதல் வரைக்கும் இவர்கள் மரண நித்திரையில் காத்திருக்கவேண்டும் )

சிறந்த கைப்பிரதிகளை பார்க்கும்போது இந்த குறிப்பு பயனுள்ளதாக காணப்படுகிறது. "நாம் அனைவரும் நித்திரை அடைவோம்" என்று அவர் கூறும் உறுதிகூறுதலை கவனிக்கவும். இங்கு எல்லா பரிசுத்தவான்களும் நித்திரை அடைவார்கள் என்று பவுல் உறுதியளிக்கிறார். நித்திரை அடைந்தார் என்பதற்கான அதே கிரேக்க வார்த்தை, முதல் இரத்த சாட்சியாகிய ஸ்தேவான் மரித்தபோது பயன்படுத்தப்பட்டது. (அப்போஸ்தலர்7:60) எல்லா பரிசுத்தவான்களும்காண்பார்கள் என்று புதிய ஏற்பாட்டில் உறுதியாக சொல்லப்படும் ஒரே வசனம் இதுவே. சில பரிசுத்தவான்கள் மரிக்காமல், பரலோகத்திற்கு எடுத்து கொள்ளப் படுவார்கள் என்று சில சபைகளில் காணப்படும்பிரபலமான கருத்துக்களை இந்த வசனம் நேரடியாக மறுக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில் கிறிஸ்துவின் பிரசன்னத்தின் போது மரிக்கக்கூடியவர்களுக்கு "மறுரூபம்" என்ற வார்த்தையையும் தங்களுடைய உயிர்த்தெழுதலுக்காக மரணத்தில் காத்திருக்கும், பரிசுத்தவான்களுக்கு "எழுந்திருப்பார்கள்" என்ற வார்த்தையையும் பவுல்

பயன்படுத்துகிறார். மேலும், "அழிவுக்குரிய இது அழியாமையையும்" (குறிப்பாக, இயேசுவின் பிரசன்னத்தின் போது மரிக்கிறவர்கள்) மற்றும் "சாவுக்குரிய இது சாகாமையையும் (குறிப்பாக, இயேசுவின் பிரசன்னத்திற்காக, மரணத்தில் நித்திரையாக இருப்பவர்) என்ற இந்த இரண்டு வகுப்பாரையும் பவுல் வேறுபடுத்தி காண்பிக்கிறார் - வசனம் 54.

★**வெளி 21 : 3,4,10** "மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்;...பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின் மேல் என்னை ஆவியில் கொண்டு போய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறதை எனக்குக் காண்பித்தான். "தேவன், கிறிஸ்து மற்றும் விசுவாசமுள்ளவர்கள் இராஜ்யத்தில் மாம்சத்தில் இருப்பார்களா ?

வெளிப்படுத்தலின் புத்தகம் முழுமையாக அடையாளங்களை கொண்டிருப்பதை நாம் முதலில் உணரவேண்டும். இந்த கேள்விக்கான ஒரு பகுதி பதிலை, சொல்லவேண்டுமானால்- ஆம், என்று சொல்லலாம், ஆனால் இதை தொடர்ந்து ஆராய்ந்து பார்க்கலாம்.


மேலோட்டமாக பார்க்கும்போது, தேவன் அவர்களோடு நடப்பது போல தோன்றுகிறது,

ஆதாம் மற்றும் ஏவாள் ஏதேன் தோட்டத்தில் இருந்தபோது, தேவன் அவர்களோடு நேரடியாக பேசினார். "பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்.." (ஆதியாகமம் 3:8,9,10) அவர்கள் கர்த்தராகிய ஆண்டவருடைய வார்த்தைகளை கேட்டார்கள், அவரோடு பேசினார்கள், ஆனால் அவரை பார்க்கவில்லை!

யூதர்கள் வனாந்திரத்தில் இருந்த போது ஆசரிப்பு கூடாரத்தில், உடன்படிக்கை பேழையில் தேவனுடைய பிரசன்னத்தை கண்டு பயபக்தியை வெளிப்படுத்தினார். அவருடைய பிரசன்னம் ஷெக்கினா மகிமையினால் சித்தரிக்கப்பட்டது. ஆசரிப்பு கூடாரத்தை பகலிலே மூடின மேக ஸ்தம்பத்தினாலும், இரவிலே மூடின அக்கினி ஸ்தம்பத்தினாலும் தேவனுடைய பிரசன்னம் வெளிப்படுத்தப்பட்டது. (நெகேமியா 9:19) ஆயினும் அவர் காணப்படவில்லை!

யாத்திராகமம் 33: 20 "நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது என்றார்." என்று தேவன் கூறினார். யெகோவா தேவன் மட்டுமே ஒரு தெய்வீக ஜீவியாக இருந்தார். அதற்குபின் அவருடைய ஒரே பேறான குமாரனுக்கு இந்த நிலைமையை கொடுத்தார்...... வெகு சீக்கிரத்தில் அவருடைய சபையும் இந்த மகிமையை அடைவார்கள். ஏதேன் தோட்டத்தில் இருந்தது போல், இராஜ்யத்திலும் , இவர்களுடைய பிரசன்னத்தை அனைவரும் உணர்ந்தாலும், மனுஷரால் காணப்பட மாட்டார்கள்.

# "What Pastor Russel Said" லிருந்து பாஸ்டர் ரசலின் பதில்கள்



**★ கேள்வி-1(1914)**-பாஸ்டர் ரசல் அறிமுகப்படுத்திய படி இக்காலத்து சத்தியத்தோடு நான் இசைந்திருந்த ஒரு சபையில் கொள்கை மாறாமல் பல வருடங்கள் வாழ்ந்து கொண்டிருக்கையில், அதைவிட்டு IBSA வுக்குள் வருவதினால் நான் பெறும் பலன் என்ன ?

**பதில்** - உங்கள் தொழில் அல்லது இந்த சமுதாயத்தில் ஒரு அதிஷ்டத்தை பெறுவீர்கள் என்று நான் சொல்லலாமா ? நான் என்ன சொல்லுவேன் ? ஒரு நல்லமனசான்று அவர் பெறுவார் என்று நான் எண்ணுகிறேன். ஏன், நல்ல மனசான்றுள்ள கத்தோலிக்கர், லுத்திரன்கள்.. இல்லையா ? ஆம், நிச்சயமாக, IBSA என்ற அஸ்திபாரத்தின் மேல் நிலை நிற்காத யார் ஒருவரும் நல்ல மனச்சான்றுள்ளவர்களாக இருக்க முடியாது. வேறு சமயத்தினராக இருந்தாலும், தேவனுடைய பரிசுத்தவான்களாக மாற முடியும் என்பதை நம்மை தவிர வேறு எவரும் உணர்வதில்லை.

ஒருவர் பெயர் சபையை விட்டு IBSA வில் இணைய வேண்டிய காரணம் என்ன ? முதலாவது நீங்கள் IBSA வோடு இணைய முடியாது. நீங்கள் எங்கு இணைந்தாலும் சரி, அவர்கள் உங்களை அழைப்பதற்கு அவசியம் ஏதும் இல்லை. நீங்கள் எவ்வளவு சீக்கிரம் விடுதலையாகுவீர்களோ, உடனடியாக நீங்கள் ஒரு வேத மாணவராக மாறிவிடுவீர்கள்.

நான் எங்கிருந்தாலும் அங்கிருந்தால் என்ன ? உங்களுக்காக நான் முடிவெடுப்பதற்கு நீங்கள் எங்கிருந்தாலும், அங்கே இருங்கள் என்றும் தேவனுடைய சத்தத்தை நீங்கள் கேட்பதாக உணர்ந்தால், நீங்கள் முழு மனதோடு தேவனுடைய குரலை பின் தொடருங்கள், ஆனால் நம்மில் சிலர்.. "இனி ஒருபோதும் நான் அந்த அறிக்கைகளை நம்புவதில்லை மற்றும் அங்கு நான் இருக்கவும் முடியாது, என்னால், என்னோடும், தேவனோடும் அல்லது என்னுடைய உடன் மனிதர்களோடு உண்மையாக இருக்கவும் இயலாது" என்றும் கூறலாம். ... இவைகள் அனைத்தையும் ஒருமித்து செய்தால், இவர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பார்கள். அதற்கு பின் அவர்கள் என்னவாக இருப்பார்கள் ? IBSA

**★ கேள்வி - 2** - காலக்கணக்கில் (1910).. சுற்றுலா ஊழியக்காரர் மற்றும் மற்ற சகோதரர்கள் எந்த அளவுக்கு சகோதரர் ரசலை பிரசங்கிக்கவேண்டும்? இல்லை என்று நான் கூறுவேன். நீங்கள் போதிப்பதற்கு ஏராளமான, அன்பார்ந்த நண்பர்கள் இருக்கிறார்களே. "நாங்கள் இயேசுவை பிரசங்கிக்கிறோம்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். தேவனுடைய வார்த்தைகளில் உள்ள அற்புதமான காரியங்களை நீங்கள் காணும்படிக்கு உங்களுடைய கண்களுக்கு சரியான பாதையை காட்டும்படி, தேவன் சகோதரர் ரசலை பயன்படுத்தனால் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார். ஆனால் இது சகோதரர் ரசலினால் அல்ல, ஆண்டவர் தாமே அவரை பயன்படுத்தியிருக்கிறார். ... ஆகவே சகோதரர் ரசலை பற்றி அறிந்துகொள்வதற்கு நீங்கள் வசனங்களை தேடாமல், நாம் அனைவரும் பயபக்தியோடு ஆராதிக்கும் " மகிமையான ஒருவரையே" குறித்த காரியங்களை கண்டுபிடிக்க வேதாகமத்தை தேடும் படிக்கு நான் ஆலோசனை கூறுகிறேன்... எல்லா காரியங்களையும் கண்டு வெளிப்படுத்தின யோவான் அதை காண்பித்த தூதனுடைய பாதத்தில் விழுந்தபோது, "நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக் கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள் என்றான்." என்று அந்த தூதன் கூறியது நினைவிருக்கிறதா?

**★ கேள்வி-3** (1914) சகோதரர் ரசல்.. இதில் நானும் பங்கெடுத்து கொள்வதில் பெறும் பாக்கியமாக

எண்ணுகிறேன். நீங்கள் பயன்படுத்துவீர்களா, உங்கள் வேலைக்காக இதில் இருக்கும் காசோலையை ஏற்றுகொள்வதற்கு நீங்கள் சம்மதிக்கிறீர்களா ? அப்படியானால், உங்களுடைய பார்வைக்கு நலமாக தோன்றும் எந்த வேலைக்கும் இதை நீங்கள் பயன்படுத்துவீர்களானால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

**பதில்** - இதில் 2,700 - டாலர்கள் உள்ளது. இதை நான் ஏற்றுகொள்வேனா, இல்லையா என்பதே கேள்வி. ஆம் என்பதை நாம் உறுதியாக கூறுகிறேன்.

என் அன்பார்ந்த சகோதரர்களே... எந்த பணமும் இது வரையில் வருந்தி வேண்டி கேட்கப்படவில்லை. பயன்படுத்தப்படும் எல்லா பணமும் நன்கொடையாகும் என்று நான் கூறலாம். மற்றும் வேலைக்காக பணம் கொடுப்போர் மிக ஐசுவரியமுள்ள ஜனங்களும் இல்லை. ஆனால் தங்கள் ஆத்துமாக்கள் ஆசீர்வதிக்கப்பட்ட பலர், அந்த ஆசீர்வாதத்தை பிறருக்கு கொடுக்க ஏதேனும் செய்யவேண்டும் என்று உணருகிறார்கள்.

✶ **கேள்வி -4** (1914 ஜீலை,2, கொலம்பஸ், ஓஹியோ) பரிசுத்தவான்கள் அனைவரும் அக்டோபர், 1914ல் இங்கு முத்தரிக்கப்படுவார்கள் அல்லது மாட்டார்கள் என்று தாங்கள் நினைக்கிறீர்களா ?

அனைத்து ஆதாரங்களுக்குள்ளும் நாம் செல்லப்போவதில்லை. அது மதிய வேளை முழுவதையும் எடுத்துக்கொள்ளும். தங்களிடத்தில் அந்த பிரதி உள்ளது. தாங்கள் அதை படித்தும் உள்ளீர்கள். மேலும், அதை நம்ப வேண்டும் என்று எந்த வற்புறுத்தலுமில்லை. இந்த விஷயத்தில் மிகவும் நியாயமான பதில் என்று நான் எதை கண்டேனோ அதை தங்கள் முன் வைத்தேன். தங்கள் இதயத்தைத் திருப்திபடுத்தியுள்ளதைப் போலவே, அதில் சிறிதோ அல்லது முழுவதையுமோ நம்புகிறீர்கள்.


... புறஜாதிக்கு ஏழு காலங்கள் குறிக்கப்பட்டுள்ளது. அவர்களின் காலங்கள் துவங்கிவிட்டது..... நாம் நம்புகிறோம். கிமு 606ஆம் ஆண்டு மற்றும் புறஜாதிகளின் ஏழு காலங்கள் 2,520ஆண்டுகள் நீடித்தன, 1914ம் ஆண்டின் இறுதி மற்றும் 1915ஆம் ஆண்டின் துவக்கம் வரை அது நீடித்தது என நாம் நம்புகிறோம். பிறகு எதை நாம் எதிர்பார்க்க வேண்டும் ? ......... புறஜாதிகள் விலக வேண்டும் என்று அவர்களுக்கு அறிவிக்கப்படும் என்று நான் கருதுகின்றேன். புறஜாதிகளுக்கு இதுவே பொருள்படுகிறது. .. இதை அறிந்துகொள்ள எனக்கு போதுமான ஞானம் இல்லை. (பக்கங்கள் 79-89)

✶ **கேள்வி - 5** (1909) பதினோராம் மணி நேரத்தில் துவங்கி முடிவு வரை எவ்வளவு காலம் உள்ளது என்று நாம் கருதவேண்டும் ?

**பதில்** - நிச்சயமாக அதை அறிந்துக்கொள்ள நானும் விரும்புகிறேன். (பக்கம் 75)

இன்றைய தீர்க்கதரிசனத்தில்

# சமுதாயத்தை மாற்றியமைத்தல்



"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." 11பேதுரு 3:10

2007 ஆம் ஆண்டு ஜீன் மாதம், பத்து ஆண்டுகளுக்கு முன்பு, உலகில் உள்ள அனைத்தும் மாறிவிட்டது. ஆப்பிளின் நிறுவனர், காலம் சென்ற ஸ்டீவ் ஜாப்ஸ் என்றவர், ஐபோனை அறிமுகப்படுத்தினார். ஆனால் இந்த புதிய சாதனம் வெறும் தொலை பேசி மட்டுமல்ல. அதை உபயோகப்படுத்தும் ஒவ்வொரு தனிமனிதனின் பையிலும் அது முழு உலகத்தையும் தந்தது. உயர்ஸ்தானத்தில் இருப்பவர்களுக்கு அது ஒரு ஆடம்பர பொருளாய் மாறியது. "நாங்கள் உண்மையில் இது இல்லாமல் வாழ முடியாது " என்று தற்போதைய விளம்பரம் ஒன்று பெருமையடித்தது.

தொடர்ந்து வந்த சகாப்தத்தில் "ஸ்மார்ட்போன்" சமூக மாற்றத்தை தூண்டிவிட்டுள்ளது. அதில் உள்ள அடிப்படை வசதிகள், அப்பல்லோவின் சந்திர பயணத்திற்கு உபயோகபடுத்தப்பட்ட கணினிகளை விட அது பலமடங்கு சக்தி வாய்ந்ததாய் திகழ்கிறது. அதனை உபயோகப்படுத்துவோர், எச்சமயமும் தங்கள் வேலையுடனும் தம்மைப்போல் இருக்க வேண்டும் என்ற நண்பர்களுடனும் இணைந்திருக்க செய்கிறது. நல்ல மற்றும் கெட்ட மனித அறிவு அனைத்தையும் நடைமுறையில் அறிந்துகொள்ள உதவுகிறது. அவை சமூகங்களை கண்டுபிடிக்கவும், உருவாக்கவும் உதவுகிறது. இந்த சகாப்தத்தில் இந்த ஸ்மார்ட் போன் மற்றும் அதன் சாதனங்கள் மக்களை எவ்வாறு ஈர்த்துள்ளது என்றால் முன்பு "வசதிக்காக" உபயோகபடுத்திய சாதனம் இன்று "உயிர் நாடியாக" மாறியுள்ளது சமீபத்திய ஒளிப்பரப்பில், "கண்ணாடி மற்றும் உலோகப் பொருளால் ஆன இந்த பொருள், உலகின் திறமை" என்கிறார். தெற்கு பாப்டிஸ்ட் தியோலாஜீகல் செமினாரின் தலைவராய் திகழும் R.Albert Mohler Junior என்பவர் மேலும் "பின்னோக்கி பார்கையில், இந்த ஸ்மாட்போன் தான் இந்த உயர்ந்த தனித்துவமிக்க உலகில், உச்சநிலை தனிமை படுத்தும் கருவியாய் விளங்கும்"என்கிறார். நாம் கொஞ்சம் கொஞ்சமாய் சமுதாயத்திலிருந்து தனிமைப்படுவதில் அதிகரித்து கொண்டே இருக்கிறோம். பத்து வருடங்களுக்கு முன்பு ஒரு கைப்பேசி தொடர்பு சாதனமாய் மட்டுமே திகழ்ந்தது. இன்று அது முழு டிஜிட்டல் உலகத்தையும் நம் பாக்கெட்டில் எடுத்து செல்ல அனுமதிக்கிறது.

இது ஒரு புதிய சமூக எல்லைகளை உருவாக்கியுள்ளது. இணையதளத்தில் உடனடியாக ஏதாவது ஒன்றை "பதிவு" செய்ய இயலும் "தனிப்பட்ட விஷயம்" என்ற ஒன்று இக்காலத்தில் பிள்ளைகளிடம் இல்லை. பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவுக்கும் உடனடியாக பகிரப்படும் சகாப்தத்தில் வளர்கிறார்கள். "பயனாளியை பிறருடன் இணைக்கும் வாக்குறுதியுடன் தான் அந்த அசலான ஐபோன் வந்தது. ஆனால் அது சரியாக எதிரான விளைவுகளையே முளைப்பித்தது. அது சொந்த தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் களங்களில் நம்மை மூழ்கி, நம்மை மேலும் தனிமைப்படுத்தியுள்ளது.

**சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளம்:**

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, சராசரி நபர் ஒருவர் தன்னை இணையதளத்துடன் இணைக்க ஆரம்பித்தார். 2000ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது, கட்சி வேட்பாளர் அல் கோர், "இணையதளத்தை" கண்டுபிடித்தாக கூறினார். 21ம் நூற்றாண்டிற்கு முன்பு இண்டர்நெட் பெரும்பாலும் கல்வி மற்றும் அமெரிக்க அரசாங்கத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. "அப்பர்நெென்" என்னும் வேறொரு ஆய்வு நெட்வோர்க்கு, 1969 அம் ஆண்டு அமெரிக்கா நிதியுதவி செய்தது. இன்று நம்மிடம் இணையதளம் மட்டும் அல்ல, அதனுள் சமூக ஊடகங்களும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

சமூக ஊடகம், தனிநபர் ஒருவரை எளிய மற்றும் உடனடி முறையில் தொடர்பு கொள்ளஅனுமதிக்கிறது. கருத்து, எண்ணம், மற்றும்

பிற உள்ளடக்கங்களை பகிர்ந்து கொள்ளும் திறனை மட்டும் அது கொண்டிருக்கவில்லை, மேலும் அவர்களுக்கு கெட்ட பெயரை சம்பாதிக்கவும், அவர்களுடைய செல்வாக்கை விரிவாக்கவும் செயல்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதி டோனால்ட் டிரம்ப், இடைத்தரக்காக எல்லாம் கடந்து, Twitter account என்னும் சமூக ஊடகத்தைப் பயன்படுத்தி உலகில் உள்ள ஒவ்வொரு நபரிடமும் நேரடியாக தொடர்பு கொள்கிறார்.

இந்த திறன் எவ்வாறு மாற்றியமைக்கப்பட்டது, மேலும் கருத்துக்கள் பரவுவது எவ்வளவு எளிதாக செயல்படுகிறது. தொலைதூர இடங்களுக்கு செய்திகள் மற்றும் தகவல்கள் செல்ல பல நாட்கள் அல்லது வாரங்கள் ஆகும். ஆனால் இப்பொழுது சில விநாடிகளே ஆகின்றன. உலகில் உள்ள மனிதர்களுக்கு இது போன்ற ஒரு எளிய தொடர்பு இதுவரை கிடைக்கவில்லை. வரலாறு முழுவதும், பல தனிநபர்கள் மற்றும் அரசாங்கங்கள் , தகவல் மற்றும் கருத்துக்கள் பரப்புவதை கட்டுப்படுத்தியதின் மூலம் தங்கள் அதிகாரத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தன. இனி அவர்கள் இவ்வாறு செய்ய இயலாது. ஒரு தனிநபருக்கு கிடைக்கும் தொழில் நுட்பம் சிக்கனமாகவும், பயன்படுத்த எளிதாகவும் இருப்பதால் சில பயிற்சிகளின் மூலம் ஏறக்குறைய எல்லோராலும் தகவல் தொடர்பின் ஒரு முனையாக விளங்க முடியும்

உதாரணமாக 2016ஆம் ஆண்டு, ஈரானிய தேர்தலின் போது "அதிகாரபூர்வமான" தேர்தல் முடிவுகளை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அங்கு என்ன நடக்கிறது என்ற படிமங்கள் பரவுவதை கட்டுபடுத்த ஈரானிய அரசாங்கள் பெரு முயற்சி எடுத்து வந்தது. அந்த தேர்தலின் போது நடந்த உண்மை சம்வங்களை பார்க்கும் உலகத்தை அது முழுமையாகத் தடுக்க இயலவில்லை. இந்த உலகம் முன்பு அனுபவிக்காத பலவற்றை இப்பொழுது அனுபவித்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் மற்றும் அதன் தலைவர்கள் இனி தங்களை தனிமைப்படுத்த இயலாது. அவர்கள் உலகை தவிர வேறு ஓர் உலகம் தெரியாது என்று இனி மக்களால் சொல்ல இயலாது. இனி மக்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதில் திறமை இல்லாதவர்களாய் இருக்க மாட்டார்கள் - அது எவ்வளவு தீவிரவாத சிந்தனையாக இருந்தாலும் அல்லது அந்த சிந்தனை சரி என்று பிறர் ஏற்க மறுத்தாலும் இனிமேல் மக்களை முற்றிலுமாக அமைதியாக்க முடியாது.

**ஆயிரம் ஆண்டு அரசாட்சி:**

இதுவரை எப்போதும் செய்யப்படாத அளவிற்கு இந்த சமூகத்தின் அநீதிகள் இன்னும் பரந்த முறையில் வெளிப்படுத்தப்படும் என்ற கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னத்தை சம்பந்தப்படுத்தும் காலத்தை குறித்து பேதுரு - 11பேதுரு 3:10ல் குறிப்பிடுகிறார். சமூக ஊடகம் இத்தகைய வெளிப்படுத்துதலை அனுமதித்துள்ளது. பரலோகம் - பூமியின் வல்லமைகள், மதம், சமூகம், பொருளாதாரம், அரசியல் - தங்கள் பாவங்கள் மிக அதிக அளவில் அம்பலப்பட இருப்பதால் படிப்படியாக சிதைக்கப்படும். கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு அரசாட்சியில் (வெளி 20:4-6) இந்த வல்லமைகள் அனைத்தையும் இறுதியாக அழித்துவிடும்.

கிறிஸ்துவின் இராஜ்யத்தின் நோக்கம் இந்த உலகம் முழுவதும் இருக்கும். அது ஆதாமின் மரண சிறைச்சாலையிலிருந்து எல்லா மனிதரையும் விடுவிக்கும். (ஏசாயா 42:7, 49:9, 61:1) இது தற்போதைய பூமிக்குரிய இராஜ்யங்களையெல்லாம் கலைத்து மனுக்குலத்தை ஒரே பரிசுத்த தேசமாக மாற்றும். (சங்கீதம் 2-9, தானியேல் 2:44, வெளி 22:17) இது தேவனைப் பற்றி அனைவருக்கும் கற்றுத் தரும் (எரேமியா 31:34, ஏசாயா 11:9, ஆபகூக் 2:14) அது போன்று இருக்கும் பாவம் மற்றும் சுயநலம் என்னும் சூழ்நிலையை மாற்றி, அதற்கு பதிலாக பரதீசை நமக்கு தர காத்திருக்கிறது. (ரோமர் 8:19)

முதலில் மனிதன் பரிபூரணமாக படைக்கப்பட்டான் என்று வேதாகமத்தின் மூன்று அத்தியாயங்கள் குறிப்பிடுகிறது. அவன் தேவ சாயலில் படைக்கப்பட்டான் என்றும், அவன் வாழ்வைத் தக்கவைத்துக் கொள்வதற்கு மிகவும் ஏற்றதான ஒரு சூழலில் வைக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. தீய விளைவுகள் அவரை சூழ்ந்து இருந்தாலும், அவருக்கு தேவையான அனுபவம் இல்லாததாலும், முதல் மனிதன் ஆதாம் தனது பரிபூரணம் என்னும் நிலையிலிருந்து வீழ்ந்து, அதன் விளைவாக வியாதி, துன்பம், மரணம் என்பவற்றை எதிர்கொண்டார். அவருடைய பாவத்தின் அளவினால் அவருக்கு இந்த கடுமையான தண்டனை

விதிக்கப்படவில்லை, மாறாக படைத்தவருக்கு கீழ்ப்படிவதற்கான கொள்கை உடைந்துவிட்டதால் தான்.

தேவனுடைய ஞானம், மனுக்குலம் முழுவதையும் அபூரண நிலையில் மூழ்க அனுமதித்தது. ஏனெனில் மனிதன் தீமையின் நேரடி அனுபவத்தின் பலனை புரிந்துகொள்வான். மேலும் தெய்வீக சட்டத்திற்கு கீழ்ப்படியாததால் எதிர் கொள்ள வேண்டிய மோசமான விளைவுகளையும் கற்றுக் கொள்வான். இந்த அனுபவத்தின் பலனை பெற்றுக்கொள்ள ஏற்கனவே மனுக்குலம் அதிக விலை கொடுத்துள்ளதாக மனிதனின் வரலாறு நிரூபிக்கிறது. உலகம் முழுவதும் பாவம் மற்றும் மரணத்தின் ஆட்சியின் சுமைகளின் கீழ் வேதனையுற்று புலம்பிக்கொண்டும், வருத்தப்பட்டுக் கொண்டும் இருக்கிறது. இதனால் விடுதலைக்காக காத்துக்கொண்டிருக்கிறது. (ரோமர் 8:22) முழு மனுகுலத்திற்கும் தெரியாமல், மனிதனின் மீட்புக்கான தேவனின் திட்டம், அவனின் வீழ்ச்சியலிருந்தே, தொடர்ந்து முன்னேறி கொண்டே இருக்கிறது.

வேதாகமம் குறிப்பிடுவது போல், " எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது...." (1தீமோத்தேயு 2:6), "ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமை யினாலே அநேகர் பாவிகளாக்கப் பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்..." (ரோமர் 5:18-19) தேவனுடைய பூமிக்குரிய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் வேலை கிறிஸ்துவின் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும். அவருடைய முதல் மற்றும் இரண்டாவது வருகைக்கு இடையே அவர் பூமியிலிருந்து விலகியிருந்தாலும், தாலந்து உவமையில் கூறியது போல், தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்க கிறிஸ்து மீண்டும் வருவார் என்று வாக்களிக்கிறார். (லூக்கா 19-11:15) கிறிஸ்துவுடன் இணைந்து ஆயிரம் ஆண்டுகள் மகிமை அடைந்த சபை ,கிறிஸ்துவுடன் இனைந்து ஆட்சி செய்யும் நன்மதிப்பை பெறுவார்கள் என்று யோவான் குறிப்பிடுகிறார். அச்சமயம் மனித இனம் நீதியை கற்றுக்கொள்ளும். தங்கள் இருதயங்களிலிருந்து, ஆதாமின் பாவத்தின் விளைவுளை அகற்றுவார்கள். (வெளி 5:10)

இந்த இராஜ்யத்தில், கிறிஸ்துவின் அறிவு இந்த பூமியை நிரப்பும் "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்."(ஏசாயா 11:9), "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்... " (எரேமியா 31:34) உலகம் முழுவதும் நீதியான தகவல் தொடர்புகள் மிக எளிமையாகவும் வேகமாகவும் பரவுவதற்கு சாட்சியளிக்கவே, சமூக ஊடகங்கள் இன்று வளர்ந்து கொண்டிருக்கிறது.

தேவன் "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்...." (செப்பனியா 3:9) என்பது இந்த இராஜ்யத்தின் மூலம் கிடைக்கும் என்ற வேதாகமம் நமக்கு வாக்களிக்கிறது. தேவனுடைய வார்த்தை எருசலேமிலிருந்து புறப்பட்டு, கிறிஸ்துவின் அறிவு இந்த உலகம் முழுவதும் செல்லும். (ஏசாயா 2:3, 11:9, எரேமியா 31:34) அந்த இராஜ்யத்திற்காகவும் மற்றும் எல்லோருக்கும் சமத்துவம் மற்றும் நீதிக்கான அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற ஜெபிக்கிறோம் !